விலை: 60.00
பக்கங்கள் : 22
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 314 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 12 ஞாயிற்றுக்கிழமை (29.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### தையிட்டி நாகதம்பிரான் ஆலயத்தில்
# பொங்கலிட்டு வழிபட்டவர்களுடன் பொலிஸார் முரண்பட்டதால் குழப்பம்



(யாழ்ப்பாணம்)

தையிட்டி நாகதம்பிரான் ஆலயத்தில் பொங்கல் வழி பாட்டில் ஈடுபட்டவர்களுடன் பொலிஸார் முரண் பட்டதால் அங்கு குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது.

தையிட்டியில் அமைக்கப்பட்ட சட்டவிரோத விகா ரைக்கெதிராக ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப் படும் போராட்டம் நேற்று முன்தினம் மாலை ஆரம்பமானது.

21

# போர்ட் சிற்றியில் வரியற்ற வணிகம்
### வர்த்தமானி வெளியானது

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்தில் சுங்கவரியற்ற சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் அல்லது வரியற்ற பாரிய வர்த்தக அங்காடிகளை மேற்கொள் வதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகளை அரசாங்கம் வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற வகை யில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள் ளது.

21

# யாழ்.பல்கலையில் திருமந்திர மாநாடு



03

# ரணில் – பஸில் கடும் மோதல்
## அரசுக்குள் வலுத்தது முறுகல்



(கொழும்பு)

அமைச்சரவை மாற்றத்தால் ஜனாதிபதி ரணில் - பெரமுன அமைப்பாளர் பசில் இடையே கடும் மோதல் நிலை உரு வாகியுள்ளது.

இதனால் அரசுக்குள் முறுகல் நிலை வலுத்துள்ளது.

(21ஆம் பக்கம் பார்க்க)



# தையிட்டியில் விகாரைக்கு எதிரான போராட்டம்
### சகோதர மொழி பேசுபவர்களும் இணைவு



(தையிட்டி)

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதி ரான போராட்டத்தில் சகோதர மொழி பேசு பவர்களும் இணைந்து

21

### சம்பள உயர்வைக் கோரி
# பாரிய போராட்டத்துக்கு தயாராகும் அரச தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க சம்பள உயர்வை வழங்குமாறு கோரி அரசுக்கு எதிராக பாரிய போராட்டத்தை முன்னெடுக்க அரச தொழிற் சங்கங்கள் தயாராகி வருகின்றன.

21

# இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வாருங்கள்



### ஜேர்மனிக்கு எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு

(கொழும்பு)

இலங்கையில் முதலீடு களை மேற்கொள்ள முன்வாருங்கள் என

21

# 25 இந்திய மீனவர்கள் தலைமன்னாரில் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த 25 இந்திய மீனவர்கள் நேற்று கைது செய்யப்பட் டுள்ளனர்.

நேற்று பிற்பகல் முன்னெ டுக்கப்பட்ட ரோந்து நடவடிக் கையின் போது இவர் கள் கைது செய்யப்பட்டதாக கடற் றொழில் திணைக்களம் தெரி வித்துள்ளது.

தலைமன்னாருக்கும்தனுஷ் கோடிக்கும் இடையிலான கடற்பரப்பில் 3 படகு களுடன் குறித்த 25

22

# அரசின் வருமானத்தை உயர்த்த வரியை அதிகரிக்க தீர்மானம்
### அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

அரசின் வருமானத்தை உயர்த்த வரியை அதிகரிக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட் டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள் ளார்.

பம்பலப்பிட்டி ரயில் நிலைய மேம்பாலத்திற்கான தற்காலிக படிக்கட்டு

21

## நடுவு நிலை தவறாது நோக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு தபால் பெட்டி வீதியில் நன்னீர்க் கிணறு மற்றும் மின்சார வசதியுடன் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
பருத்தித்துறை வீதியில் இருந்து 50 மீற்றர் தொலைவில்

(17606)

**076 669 5590**


## வவுனியாவில் யானையின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா - ஹொரவப்பொத்தானை வீதியில் இறந்த நிலையில் யானை ஒன்று நேற்றுக் காலை மீடக்கப்பட்டுள்ளது.

ஹொரவப்பொத்தானை காட்டுப் பகுதியில் இருந்து வீதி நோக்கி வந்த யானையே வீதி ஓரத்தில் இறந்துள்ளது. வீதியால் சென்ற வர்கள் குறித்த யானை இறந்து இருப்பதை அவதானித்ததையடுத்து பொலிஸார் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங் கியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த யானை இறந்தமைக்கான கார ணம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

(ம-7)


## கிழவன்காடு கலாமன்றம்

காரைநகர் யாழ்கிளை

'காரைநகர்'

எனும் பெயர் பெற்று நூற்றாவது ஆண்டில்
(12.09.1923 - 12.09.2023)
நடாத்தும்

### வருடாந்த பரிசளிப்பும் கலை நிகழ்வும்

இடம் - கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு காரைநகர்
காலம் - 29.10.2023 ஞாயிற்றுக்கிழமை, பி.ப 3.00 மணி

### அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**தலைமை**
காரை.திரு.அ.சோதிநாதன் அவர்கள்
(மாகாணக் காணி ஆணையாளர்,வடமாகாணம்)

**பிரதம விருந்தினர்**
உயர்திரு.அ.சிவபாலசுந்தரன் சுதாஹரி தம்பதியினர்
(அரசாங்க அதிபர்,மாவட்டச் செயலகம்,யாழ்ப்பாணம்)

**சிறப்பு விருந்தினர்**
திரு.க.சிவகரன் அவர்கள்
(பிரதேச செயலாளர்,பிரதேச செயலகம்,காரைநகர்)

**துறைசார் விருந்தினர்**
'நாதஸ்வர இளவரசன்' - 'கலைப்பரிதி'
திரு.திருமதி.றஜீந்திரன் வாசஸ்பதி தம்பதியினர்

**கௌரவ விருந்தினர்**
'கலைமாடக்கோன்'
திரு.திருமதி.சிவஞானம் உமாதேவி தம்பதியினர்
(கௌரவ உறுப்பினர்,கிழவன்காடு கலாமன்றம்,காரைநகர்)

**நிகழ்வுகள்**
- கலாமன்ற மாணவர்களின் கலை நிகழ்வுகள்
- இசைக்கச்சேரி
  வழங்குபவர் - 'சிதம்பரம் இசை மைந்தன்' நயினை ப.சிவமைந்தன்
  (இசைத்துறை விரிவுரையாளர்,யாழ்.பல்கலைக்கழகம்)

குறிப்பு - நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ் கிளையிலிருந்து பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகும். (இல 428 கே.கே.எஸ் வீதி வண்ணை சிவன் கோவில் அருகாமை)

கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர்

(C-7515)

கிழவன்காடு கலாமன்றம்
யாழ் கிளை
இல. 428, கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம்



## கட்டிட வேலைகள்

கூரை வேலைகள்,லெவல்சீட் வேலைகள், சட்டரிங் வேலைகள் மற்றும் பெயின்ரிங் வேலைகள் முழு அளவிலான கட்டிட ஒப்பந்த வேலைகள் பொறியியலாளர்களின் முழுமையான மேற்பார்வையுடன் தரமாகவும் உறுதியாகவும் செய்து தரப்படும் (C-7516)

**076 288 4366**



## மாபெரும் உயர்தரக் கருத்தரங்கு

A/L 2023
**A/L தமிழ்**
(C-7512)

ஆசிரியர்:
திரு.N.சத்தியவேந்தன்
B.A (Hons),Mphil (Tamil)

**ஆரம்பம் - 30.10.2023**
**திங்கள் 8.00 AM**

இடம்:பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி - யாழ்ப்பாணம்.

* 15 நாட்கள் நடைபெறும்.
* எதிர்பார்க்கை வினாவிடைகளுடன் கையேடுகள் வழங்கப்படும்.
* வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.

தொடர்புகளுக்கு:
077 3763 511, 077 379 5460



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 12 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு இரண்டு பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில்
- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- நன்னீர் ஊற்று.
- தரகர் தேவையில்லை

**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**

(17607)



## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும்.

(C-7551)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**


## 31ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு
23
-
01
-
1956

உதிர்வு
29
-
09
-
2023

கடந்த 29.09.2023 அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் வீரகத்தி குகராசா

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 27.10.2023 வெள்ளிக்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறு வதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.40, ஆனந்தபுரம் மேற்கு,
கிளிநொச்சி.

(C-7514)

இங்ஙனம் - குடும்பத்தினர்
077 089 0480

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு



**கூறுவிலை கோரல்**

**கண்டாவளை பருமன் குறைந்த மணல் (பூச்சு மணலை ஒத்தது)**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் வீதிக்கு மணல் இடுவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

ஒரு உழவுஇயந்திரம் (ரைக்டர்) ஆலயம் வரை கொண்டுவந்து சேர்ப்பதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.தாங்கள் சுயமாக கூறுவிலையினை தயாரித்து பூரணப்படுத்தி 2023.11.05 ஆம் திகதி **பி.ப 2.00** மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி 'செயலாளர்,ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு' எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.அல்லது கோயில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.

ந.மோகனரூபன்
செயலாளர்
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

(C-7513)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 30.09.2023 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

### அமரர் பாலச்சந்திரன் இந்திராணி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30.10.2023) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோயில் அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து அன் னாரது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன் புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

N.M. லேன்,
பருத்தித்துறை.

(17608)

குடும்பத்தினர்
077 924 3657

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றே குலமாய் திருமந்திரம் காட்டும் அன்பே சிவத்திற்கு உயிர் கொடுப்போம்

## திருமந்திர ஆன்மிக மாநாடு





(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவ மகா சபையுடன்யாழ்.பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை இணைந்து 'ஒன்றே குலமாய் திருமந்திரம் காட்டும் அன்பே சிவத்திற்கு உயிர்கொடுப்போம்' எனும் தொனிப்பொருளில் நடத்தும் திருமந்திர ஆன்மிக மாநாடு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து திருமூலரின் உருவப்படம் தாங்கி வரப்பட்டு நிகழ்வு நடைபெறும் கைலாசபதி அரங்கிற்கு கொண்டு வரப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சைவ சித்தாந்த துறைத் தலைவர் கலாநிதி பொன்னத்துரை சந்திரசேகரம் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது. (நி-33)

## குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் உடனடி நியமனம்

(கொழும்பு)

1,500 குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர் களுக்கான நியமனத்தை துரிதப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்ப லாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதன்படி, அடுத்த சில நாட்களில் நியமனம் தொடர்பில் குறிப்பிட்ட தீர்மானம் எடுக்கப்படும் என முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்க அதிகாரிகளுடன் நிதியமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)

## பட்ஜெட்டிற்கு முன்னர் அமைச்சரவையில் மீண்டும் மாற்றம்

### உள்ளக தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

வரவு -செலவுத் திட்டத்திற்கு முன்னர் அமைச்சரவை மீண்டும் திருத்தப்பட உள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வரவு- செலவுத் திட்டத்தை வெற்றி கொள்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த திருத்தம் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கும் அந்த வட்டாரங்கள் மேலும் சில புதிய முகங்கள் அமைச்சரவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் சுட்டிக் காட்டுகின்றன. அமைச்சுப் பதவிகளை மாற்றுவதற்கான யோசனைகள் ஏற்கனவே அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதன் கீழ் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பல உறுப்பினர்களுக்கு அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

## டெங்கு அபாய வலயங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பதை அவதானிக்க முடியும் என அதன் பணிப்பாளர் வைத்தியர் நளினா ஆரியரத்ன தெரிவித்துள்ளார். (நி)

## மத்திய கிழக்கில் வசிக்கும் இலங்கையர்களுக்கு அவசர தொலைபேசி சேவை

### வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

மத்திய கிழக்கில் வசிக்கும் இலங்கை பிரஜைகளுக்காக இரண்டு அவசர தொலைபேசி இலக்கங்களை வெளி விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

0094711 757 536, 0094711 466 585 ஆகிய இரண்டு தொலைபேசி இலக்கங்களை மூலம் மத்திய கிழக்கின் தற்போதைய மோதல் நிலைமை தொடர்பில் இலங்கையர்கள் அவசர உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கு மேலதிகமாக வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரப் பிரிவை வழமையான அலுவலக நேரங்களில் +94 112 338 837 என்ற தொலைபேசி எண் மற்றும் repatriation.consular@mfa.gov.lk மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம் என வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இஸ்ரேலில் உள்ள அனைத்து இலங்கையர்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறும், மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்குமாறும், ஏதேனும் அவசரநிலை ஏற்பட்டால், டெல் அவிவ் (இஸ்ரேல்) மற்றும் ரமல்லா (பலஸ்தீனம்) ஆகிய இடங்களில் உள்ள இலங்கை தூதரகங்களுடன் தொடர்ந்து தொடர்பு கொள்ளுமாறும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## காசாவில் யுத்த நிறுத்தத்தை கோரும் ஐ.நா தீர்மானம்- இலங்கை ஆதரவு

(ஜெனிவா)

காசாவில் உடனடி போர் நிறுத்தத்தை கோரி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்திற்கு இலங்கை ஆதரவளித்துள்ளது.

ஐக்கியநாடுகள் பொதுச்சபை தீர்மானம் காசாவிற்குள் மனிதாபிமான பொருட்கள் செல்வதற்கு தடையற்ற அனுமதியை வழங்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொதுமக்களை பாதுகாத்தல் சட்ட மற்றும் மனிதாபிமான கடப்பாடுகளை நிறைவேற்றுதல் என்ற இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 120 நாடுகள் வாக்களித்துள்ளன, 12 நாடுகள் எதிர்த்து வாக்களித்துள்ளன.

இந்தியா, அவுஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி, உக்ரைன் உட்பட 45 நாடுகள் வாக்களிப்பை தவிர்த்துள்ளன.

அமெரிக்காவும் இஸ்ரேலும் எதிர்த்து வாக்களித்துள்ளன.

ஜோர்தானின் தீர்மானம் ஹமாஸ் குறித்து எதுவும் தெரிவிக்காதமைக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ள அமெரிக்கா தீயசக்தியை தீர்மானம் தவிர்த்துள்ளது என குறிப்பிட்டுள்ளது. (நி)

## 19 ஆயிரம் மெற்றிக்தொன் குரக்கன் விதைகள் இருப்பு

### விவசாய திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

விவசாய திணைக்களத்திடம் தற்போது, 19 ஆயிரம் மெற்றிக் தொன் குரக்கன் விதைகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் போகத்திற்கு பயிரிடுவதற்கு தேவையான அளவை காட்டிலும் அதிகளவில் இருப்பதாக விவசாய திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், மாத்தளை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளிடம் மேலும் 7 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் குரக்கன் விதைகள் கையிருப்பில் உள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## டிராவிஸ் ஹெட், டேவிட் வோர்னர் அசத்தல்

# 'நூறு' அவுஸ்திரேலியா 'ஜோரு'

# இறுதிப் பந்தில் வீழ்ந்தது நியூசிலாந்து

உலகக் கிண்ண அரங்கில் தனது 100வது போட்டியில் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 5 ஓட்டங்களால் 'திரில்' வெற்றி பெற்று பரவசமடைந்தது.

இறுதிவரை போராடிய நியூசிலாந்து அணி கடைசி பந்தில் வீழ்ந்து ஏமாற்றமடைந்தது.

இந்தியாவில் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இமாச்சல பிரதேசத்தின் தரம்சாலாவில் நேற்று நடந்த 27லீக் போட்டியில் அவுஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பமே அமர்க்களமாக இருந்தது. வோர்னர் 28வது, ஹெட் 25வது பந்துளில் அரைசதம் எட்டினர். 8.5வது ஓவரில் அவுஸ்திரேலியா 100 ஓட்டங்களை கடந்தது. இந்நிலையில் ஆஸி அணி 19 ஓவர்களில் 175/0 ஓட்டங்களை எட்டியபோது, வோர்னர் (81), பிலிப்ஸ் பந்தில் வீழ்ந்தார்.



மறுபக்கம் அறிமுக உலக கிண்ண போட்டியில், 59 வது பந்தில் சதம் அடித்தார் ஹெட். ஒருகட்டத்தில் அவுஸ்திரேலியா 23 ஓவரில் 200/1 ஓட்டங்கள் எட்ட, எப்படியும் 450 ஓட்டங்களுக்கு மேல் எடுக்கும் என நம்பப்பட்டது. மாறாக ஹெட் (109), ஸ்மித் (18), மார்ஷ் (36), லபுசேன் (18) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, ஓட்டவேகம் குறைந்தது.

மக்ஸ்வெல் 24 பந்துளில் 41 ஓட்டங்கள் எடுத்தார். நீஷம் வீசிய 48வது ஓவரில் 4 சிக்சர் உட்பட 27 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. கடைசி நேரத்தில் இங்லிஸ் (38), அணித் தலைவர் கம்மின்ஸ் (37) உதவ, அவுஸ்திரேலிய அணி 49.2 ஓவரில் 388 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

கடின இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு கான்வே (28), யங் (32) ஜோடி வேகமான ஆரம்பம் கொடுத்தது. அரைச் சதம் அடித்த மிட்செல் (54), ஜாம்பா சுழலில் சிக்கினார். அணித்த தலைவர் லதாம் 21 ஓட்டங்களில் திரும்பினார்.

ரச்சின் ரவிந்திரா, 77 வது பந்தில் சதம் எட்டினார். இவர் 116 ஓட்டங்களுடன் ஆட்டமிழந் தார். தனது 100வது ஒருநாள் போட்டியில் பங்கேற்ற சான்ட் னர் (17), விரைவில் கிளம்ப, சிக்கல் ஏற்பட்டது. ஹென்றி (9) ஏமாற்றினார்.

**நீஷம் போராட்டம்**


கடைசி ஓவரில் நியூசிலாந்து வெற்றிக்கு 19 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஸ்டார்க் பந்து வீச, முதல் பந்தில் 1 ஓட்டம் எடுத்தார் போல்ட். அடுத்த பந்து 'வைட்' பவுண்டரியாக செல்ல 5 ஓட்டங்கள் கிடைத்தன. 2, 3, 4வது பந்தை ஸ்டார்க் கட்டுக்கோப்பாக வீச, 2, 2, 2 ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட்டன. கடைசி 2 பந்தில் 7 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

5வது பந்தில் 1 ஓட்டங்கள் எடுத்து, நீஷம் (58 ஓட்.,) ஆட்டமிழக்க, நியூசிலாந்து வெற்றிக் கனவு தகர்ந்தது. பெர்குசன் கடைசி பந்தை வீணாக்கினார். 50 ஓவரில் நியூசி லாந்து 383/9 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. அவுஸ்திரேலியா 5 ஓட்டங்களால் 'திரில்' வெற்றி பெற்றது. (ம-7)




## நெதர்லாந்திடம் வீழ்ந்தது வங்கம்

## உலகக் கிண்ணத்தில் அதிர்ச்சி சம்பவம்



நெதர்லாந்து அணியின் கட்டுக்கோப்பான பந்து வீச்சில் சிக்கிய பங்களாதேஷ் அணி 87 ஓட்டங் களில் வீழ்ந்து அதிர்ச்சிக்குள்ளானது.

இந்தியாவில் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. நேற்று, கொல்கத்தாவில் நடந்த லீக் போட்டியில் நெதர்லாந்து, பங்களாதேஷ் அணிகள் மோதின.

நெதர்லாந்து அணிக்கு விக்ரம்ஜித் சிங் (3), தவுத் (0) ஏமாற்றினர். வெஸ்லே பாரேசி (41) ஓரளவு கைகொடுத்தார். ஆக்கர்மேன் (15), டி லீட் (17) நிலைக்கவில்லை. பின் இணைந்த அணித் தலைவர் ஸ்காட் எட்வேர்ட்ஸ், சைபராந்த் ஜோடி பங்களாதேஷ் பந்துவீச்சை எளிதாக சமாளித்தது. பொறுப்பாக ஆடிய எட்வர்ஸ் அரைசதம் கடந்தார். ஆறாவது விக்கெட்டுக்காக 78 ஓட்டங்கள் சேர்த்தபோது முஸ்தபிஷூர் பந்தில் எட்வேர்ட்ஸ் (68) ஆட்டமிழந்தார். சைபராந்த் (35) ஆறுதல் தந்தார்.

நெதர்லாந்து அணி 50 ஓவர்களில் 229 ரன்னுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. லோகன் வான் பீக் (23) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு லிட்டன் தாஸ் (3), தன்ஜித் ஹசன் (15) ஏமாற்றினர். மீகெரன் 'வேகத்தில்' நஜ்முல் ஹொஸைன் ஷான்டோ (9), அணித் தலைவர் சகிப் அல் ஹசன் (5), முஷ்பிகுர் ரஹீம் (1) வெளியேறினர். மெஹிதி ஹசன் மிராஸ்(35) ஆறுதல் கொடுத்தார். மெஹதி ஹசன் (17), மக மதுல்லா (20), டஸ்கின் அகமது (11), முஸ்தபிஷூர் (20) சோபிக்கவில்லை.

பங்களாதேஷ் 42.2 ஓவரில் 142 ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வியடைந்தது. நெதர்லாந்து சார்பில் மீகெரன் 4 விக்கெட்டுக்களைக் கொய்தார். இவரே போட்டியின் சிறந்த ஆட்டக்காரராகவும் தெரிவானார். (ம-7)

## யாழ்.மத்திய - கொழும்பு வெஸ்லி இடையேயான கால்பந்து சமர்





(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரிக்கும் கொழும்பு வெஸ்லி கல்லூரிக்கும் இடையில் நட்புறவுடன் கூடிய பெரும் கால்பந்து சமர் ஆரம்பமாகியுள்ளது.

இவ்வாண்டு வெஸ்லி கல்லூரி அதிபர், விளையாட்டு பொறுப்பாசிரியர், பயிற்றுவிப்பாளர்கள், பழைய மாணவர்கள், 20 வயதுக்குட்பட்ட, 16 வயதுக்குட்பட்ட கால்பந்து அணியினர், பெற்றோர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் வருகை தந்த வெஸ்லி கல்லூரி சமூகத்தினரை யாழ். மத்திய கல்லூரி அதிபர், விளையாட்டு பொறுப்பாசிரியர், பயிற்றுவிப்பாளர்கள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் மத்திய கல்லூரி ஆதரவாளர்கள் வரவேற்றனர்.

மூன்று போட்டிகள் இடம்பெற்றன.

**16 வயதுப் பிரிவில்**

5:0 அடிப்படையில்வெஸ்லி கல்லூரி வெற்றியீட்டியது.

**20 வயதுப் பிரிவில்**

3:0 அடிப்படையில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

**பழைய மாணவர்களுக்கான போட்டியில்,**

2 : 0 யாழ். மத்திய கல்லூரி என பழைய மாணவர் அணி வெற்றி பெற்றது.

2024ஆம் ஆண்டுக்கான இப் பெரும் கால்பந்து போட்டி கொழும்பு வெஸ்லி கல்லூரியில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் 7 பேரும் பிணையில் விடுதலை

(வவுனியா)

வடக்கு-கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி உட்பட 7 பேரும் நேற்று முன்தினம்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகரசபை உள்ளக மண்டபத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கக் கூட்டம் இடம்பெற்ற போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தை சேர்ந்த இரு அணியினருக்கு இடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இது தொடர்பில் இரு பகுதியினரும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை யடுத்து வடக்கு-கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின்சங்க தலைவி உட்பட 7 பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அந்த 7 பேரும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அன்று இரவு பொலிஸார் பிணையில் விடுவித்துள்ளதுடன் இணக்க சபையில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கையும் எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி)

# எந்தவொரு பிரச்சினைக்கும் போர் தீர்வல்ல ஜீவன்



(கொழும்பு)

பாலஸ்தீனத்தில் விரைவில் அமைதி நிலை திரும்ப வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு எனவும், போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிலையை காணும் போது கவலையளிக்கின்றது எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன் தூதரகத்துக்கு சென்றிருந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான் இலங்கைக்கான பாலஸ்தீன் தூதுவர் கலாநிதி சுஹைர் ஹம்தல்லா செயிட் ஐ சந்தித்து கலந்துரையாடினார்.

அமைச்சருடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், பிரதி தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.இராஜதுரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

போரில் உயிரிழந்த மக்களுக்கு தமது அனுதாபங்களையும் வெளியிட்டுள்ளார்.

பாலஸ்தீன் விவகாரத்தில் இலங்கை மக்கள் உள்ள நிலைப்பாட்டிலேயே தானும் இருப்பதாகவும் எந்தவொரு பிரச்சினைக்கும் போர் தீர்வல்ல எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (நி)

# திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்த ஜப்பான் கப்பல்

(திருமலை)

ஜப்பான்கடல்சார்தற்காப்புப்படையின் அகேபோனோ கப்பல் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று சனிக்கிழமை திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள இந்தக் கப்பல் 150.5 மீற்றர் நீளமுடையதாகும்.

இந்த கப்பல் நாட்டில் தங்கியிருக்கும்போது இரு நாட்டு கடற்படைகளுக்கு இடையேயான நட்புறவை மேம்படுத்தும் வகையில் இலங்கை கடற்படையால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் பங்கேற்க திட்டமிடப்பட்டுள்ளத (நி)


## நிர்மாணத்திற்கான சிகிச்சையகம்- Construction Clinic

நிர்மாணத்துறையில் ஈடுபட்டு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள எவரும் தத்தம் பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பின்................

- குறைந்த செலவில் நிறைந்த வீடமைப்பதனால்...........
- கொடுப்பனவுகளை வழங்குவதிலும் பெறுவதிலும் முட்டுக்கட்டையா?...........
- நிர்மாண முகாமைத்துவத்தில் சிக்கல்களா?....
- Luxury என்ற போர்வையில் வீடு கட்டத் தொடங்கி ஏமாற்றப்பட்டுவிட்டீர்களா?
- மேலும் நிர்மாண சம்பந்தமான வேறு ஆலோசனைகளை பெற விரும்பின். இதோ

**இலவச ஆலோசனைச் சேவை**

**நடைபெறுமிடம்-32 A. நிர்மாண மேம்பாட்டுமையத்தின் பயிற்சி பிரிவு நல்லூர் குறுக்கு வீதி யாழ்ப்பாணம்**

வாரநாட்களில் திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியிலிருந்து 5.00 மணி வரைக்கும்

**ஒருநாளில் எட்டு பேருக்கு மட்டும்**

**முன்கூட்டியே பதிவு செய்யப்படவேண்டும்**

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல**

**021 222 5534 (கிழமை நாட்களில் 8.30-17.00 மணிவரை)**

இன்றே பதிவு செய்து நன்மைகளைப் பெற்றுக் கொள்ளவும்

**குழுத் தலைவர்,**
**நிர்மாண மேம்பாட்டு மையம்.**

(17596)



## விருது வழங்கல்



யாழ் முஸ்லிம் சமூக ஊடகம் 2023 ஆம் ஆண்டுக்கான "யாழ்முஸ்லிம் சமூக ஜோதி" விருது முதல் முறையாக மூவருக்கு வழங்கப்படவுள்ளது என்பதை யாழ். முஸ்லிம் சமூக ஊடகம் நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் தெரிவிக்கிறார்.

யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருதுக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான R.M. இமாம், சமூகப்பற்றுள்ள கல்வியியலாளர் M.S.A.M முஹ்தார். இலக்கியவாதி A.C.நஜ்முதீன் ஆகிய மூவரும் ஆவார்கள். விருது வழங்கலுக்கு முன்னாள் YMMA பேரவையின் தேசிய தலைவர் அல்ஹாஜ் M.S.றஹீம் அவர்கள் அனுசரணை வழங்குகிறார்.

(17597)


# இராசிபலன்

29.10.2023
ஐப்பசி 12 ஞாயிற்றுக்கிழமை
பிரதமை பின்னிரவு 1.20 மணிவரை
அச்சுவினி முற்பகல் 7.17 மணிவரை
சுபநேரம்-9.03-1033மணிவரை
இராகுகாலம்-4.33-6.03 மணிவரை
சந்திராஷ்டமம்-அத்தம்

வளவன்





கொடுக்கல் -வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.





கண்ணியம் மிக்க ஒருவர் சந்திப்பு இடம் பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், செய் தொழில் மேன்மையுண்டு, எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.




நண்பர்கள் வழியில் நன்மைகள் நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.





பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வர வேண்டிய வரவுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.





பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.




மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.




பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.




பணியில் சிறு. மன உளைச்சல் ஏற்படலாம், எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, பொன்னான நாள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.




பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.




மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம்.




உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் இடம்பெறலாம், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.




குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவனுக்கு மதுபானம் கொடுத்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாவடி பகுதியில், 10 வயதுச் சிறுவனொருவனுக்கு மதுபானத்தை அருந்த கொடுத்த ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிறுவனுக்கு முச்சக்கர வண்டியினுள் வைத்து மதுபானத்தை அருந்தக் கொடுத்துள்ளார்.

இது குறித்து சிறுவனின் தாயார் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில் 35 வயதான குறித்த சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (நி-104)

# வீதியை முழுமையாக புனரமைத்து தாருங்கள்

## பிரதேச மக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வீதியை முழுமையாக புனரமைக்காமல் குறையுடன் புனரமைப்பதை நிறுத்தியமையால் மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வலி. வடக்கு பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட காங்கேசன்துறை ஊரவில் வீதி, சுமார் 28 வருட காலப்பகுதிக்கு மேலாக இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த நிலையில் 2019ஆம் ஆண்டு காலப் பகுதியில், அப்பகுதி மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

அதனை அடுத்து 2020 ஆம் ஆண்டு கால பகுதியில் இருந்து தமது வீதியை புனரமைத்து தருமாறு பிரதேச சபையிடம் மக்கள் கோரி வந்தனர். 3 ஆண்டுகள் தொடர்ச்சியான கோரிக்கையின் பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீதி புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன் போது சுமார் 300 மீற்றர் நீளமான வீதியில் 250 மீற்றர் தூரமான வீதி மாத்திரமே புனரமைக்கப்பட்டுள்ளது. மிகுதி சுமார் 50 மீற்றர் தூர வீதி புனரமைக்கப்படவில்லை.

நீண்ட காலத்தின் பின்னர் புனரமைக்கப்பட்ட வீதியை முழுமையாக புனரமைத்து தர நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர். (நி-33)

# முதியோர் தின விழாவும் சாதனையாளர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய புலம் பெயர் மண்ணின் மைந்தர்களின் துணையுடன் நடத்தும் முதியோர் தின விழாவும் சாதனையாளர்கள் கௌரவிப்பும் நிகழ்வு நாளை 30 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு காந்திஜி சனசமூக நிலைய வளாகத்தில் சனசமூக நிலைய தலைவர் த.ரமணதாசன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான குருக்கள் சிவஸ்ரீ .நா.சர்வேஸ்வரக் குருக்கள், யாழ்.மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் சு. வரதபாஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பொது அறிவு போட்டிப் பரீட்சை இன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞான வைரவர் சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் பொது அறிவுப் போட்டிப் பரீட்சை தவணைப் பரீட்சைகள் காரணமாக பிற்போடப்பட்ட நிலையில் இன்று மு.ப. 11 மணியளவில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறும்.

இப்போட்டிக்காக விண்ணப்பித்த தரம் 6 முதல் தரம்11 வரையிலான மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்ற முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி)

# காவி உடையை கவசமாக பயன்படுத்துவதை சட்டத்தை பாதுகாப்போர் அனுமதிக்கக் கூடாது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

தேசிய நல்லிணக்கத்தினை சிதைக்கும் வகையிலான எகதாளப் பேச்சுக்களும் சண்டித்தனங்களும் சட்ட ரீதியாக தண்டிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தர்மத்தை போதிக்க வேண்டிய சிலரின் தரம் கெட்ட வார்த்தைகளும் செயற்பாடுகளும் வேதனையளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட விகாராதிபதி அம்பேபிட்டிய சுமன தேரரின் அண்மைக்கால செயற்பாடுகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாடு இன்றளவும் மீளமுடியாமல் தவிப்பதற்கு பிரதான காரணமாக இருக்கின்ற கடந்த கால யுத்தம் தோன்றுவதற்கு இரண்டு தரப்பிலும் இருந்த இவ்வாறான பிரகிருதிகளின் கருத்துக்களும் செயற்பாடுகளுமே காரணமாக இருந்தது என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

அதேபோன்று உலகிற்கு சாந்தியையும் சமாதானத்தையும் போதிக்க வேண்டியவர்களின் இவ்வாறான தரங்கெட்ட செயற்பாடுகள் தொடர்பில் பௌத்த பீடங்கள் அக்கறை செலுத்த வேண்டும்.

இந்த நாட்டில் சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவான தாகவே இருக்க வேண்டும். காவி உடை கவசமாக பயன்படுத்தப்படுவதை சட்டத்தை பாதுகாக்க வேண்டிய தரப்புக்கள் அனுமதிக்க கூடாது. (நி-33)

# சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி உற்சவம் 1.11.2023 புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டபபூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதிவலம் வருவார் பிரதம குருக்கள் சிவஸ்ரீ.து.விவேகானந்தக்குருக்கள் அறிய தருகிறார். (நி)

# வாசிப்பு மாதத்திற்கான போட்டிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் வரணிப் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

அந்தவகையில் எதிர்வரும் 1 ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணிக்கு தரம் 7மற்றும் தரம் 11 மாணவர்களுக்கான கவிதைப் போட்டி,

காலை 10.30மணிக்கு தரம் 6மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி,


காலை 10.30மணிக்கு தரம் 9மாணவர்களுக்கான சிறுகதைப் போட்டி, 11.30 மணிக்கு தரம் 2 மாணவர்களுக்கான சுவரொட்டிப் போட்டி, மற்றும் காலை 11.30மணிக்கு தரம் 10,12 மற்றும் 13 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகளும் வரணி பொது நூலகத்தில் இடம்பெறும் என வரணி பொது நூலக நூலகர் அறிவித்துள்ளார். (நி -30)

# மாகாண சபைத் தேர்தலை நடத்தி

## ஜனநாயக மரபை காக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்தி நாட்டின் ஜனநாயக மரபைக் காக்குமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன், ஊடக அறிக்கை ஒன்றின் ஊடாக அரசாங்கத்தைக் கோரியுள்ளார். இது குறித்து விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,



மாகாணசபைகளுக்கான தேர்தல்களும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களும் 2025ஆம் ஆண்டில் நடைபெறும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக மாகாணசபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. மாகாணசபைகளுக்கான எல்லை மீள்நிர்ணயங்கள் ஏற்றுக்கொள்ளப்படாததன் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டதாகவும் மீள் நிர்ணயம் செய்த பின்பு தேர்தல்கள் நடைபெறும் என்றும் பேசப்பட்டாலும் எல்லைகளை மீளவும் திருத்திக்கொள்வதற்கான எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

வடக்கு-கிழக்கில் தான் விரும்பிய ஆளுநர்களை நியமித்து, தான்தோன்றித் தனமான முறையில் பௌத்த பிக்குகளும் இராணுவமும் பொலிஸாரும் கூட்டாக காணிகளைக் கபளீகரம் செய்வதும் அத்தகைய இடங்களில் புதிது புதிதாக புத்த கோயில்களைக் கட்டுவதும் எங்கோ தூரப் பிரதேசங்களில் உள்ள சிங்கள மக்களைக் கொண்டுவந்து இங்கு குடியேற்றுவதுமாக அரசாங்கம் தனது நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்கின்றது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக ஒற்றையாட்சி முறைக்குள் அதிகார பரவலாக்கத்தின் ஊடாக மாகாணசபை முறைமை ஒன்று உருவாக்கப்பட்டது. வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாணசபை முறைமை இல்லாவிட்டாலும் கூட, அதுவே இந்த அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகவும் இருக்கின்றது.

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை தடுத்து நிறுத்தி தமிழ் மக்கள் தமது இருப்பைப் பாதுகாத்துக்கொண்டு கௌரவமாக வாழ வேண்டுமென்ற அடிப்படையிலேயே இந்திய-இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்பட்டதுடன், பதின்மூன்றாவது திருத்தச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இன்று மாகாணசபைக்கான தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைத்து அதே சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில், ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல்களை எதிர்கொள்ள இருக்கின்ற ஜனாதிபதியோ அல்லது ஏனைய அரசியல் கட்சிகளோ தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள விரும்பின், குறைந்தபட்சம் வடக்கு-கிழக்கிற்கான மாகாணசபைகளுக்கான தேர்தல்களையாவது நடத்தி அதற்கான அதிகாரங்களை வழங்கி அந்த மாகாண நிர்வாகங்கள் திறம்பட செயற்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 412
Viber 076 636 3378



# தமிழர்களின் தலையை வெட்டினால்...!

“தமிழர்களின் தலையை வெட்டுவேன் என அம்ரிட்டியே சுமண ரத்தின தேரர் தெரிவித்திருந்தார். அவர் மீது எந்த நடவடிக்கையுமில்லை. இதே வசனத்தை ஒரு தமிழர் கூறியிருந்தால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலம் அவர் இன்று சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருப்பார்.”

ஒரு திரைப்படத்தில் வடிவேலு தேநீர் கடையொன்றில் தேநீர் குடித்துக் கொண்டிருப்பார். அப்போது அவர் மீது ஒரு காகம் எச்சமிட்டு விடும். அதைக் கண்ட வடிவேலுவின் சகாக்கள் ஆத்திரம் கொண்டு அந்தக் காகத்திற்கு கல்லினால் எறிய அது சங்கிலித் தொடராய் நீண்டு சென்று குறித்த தேநீர் கடை தீப்பற்றி எரியும் அளவில் வந்துவிடும்.

அதற்கு வடிவேலு கூறுவார் “காக்கா ஆய்போனதுக்காக ரீ கடையை தீக்கடையாக்கிட்டீங்களேடா” என்று.

இது நகைச்சுவைக்காக இருந்தாலும் ஒரு பெரிய இனமோதல் ஏற்படுவதற்கு காகம் எச்சமிட்டது போன்ற சிறிய சம்பவம் ஒன்றே காரணமாக அமையும் என்பதை இதனூடே கற்றுக் கொள்ளமுடியும்.

இலங்கையில் இன மோதல்கள் எழுந்ததற்கான காரணங்களும் இவ்வாறானதே.

இலங்கையில் காலம் காலமாக வந்த ஆட்சியாளர்கள் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட அட்டூழியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

இவற்றைப் பொறுத்து பொறுத்து, இயலாதுபோக அது தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் ஆயுதப் போராட்டமாக மாற்றம் பெற்றது. தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை எப்பேற்பட்டாவது முடக்கி விட வேண்டும் என்பதில் பெரும்பான்மை ஆட்சியாளர்கள் தீவிரம் காட்டினர்.

அந்தத் தீவிரத்தில் மாட்டிக் கொண்டு உயிரை இழந்தது அப்பாவிப் பொது மக்களே அதிகம்.

ஆயினும் அவற்றைக் கருத்தில் எடுக்காத அரசுகள் வன்னிப் பெருநிலப்பரப்பில் வைத்து தமிழினத்தை சல்லடை போட்டன என்பதே மெய்,

வார்த்தைகளால் விபரிக்க முடியாத இழப்புக்களையும் வடுக்களையும் சுமந்து சொல்லானத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழினத்தை தொடர்ந்தும் அடக்கி ஒடுக்கும் செயற்பாடுகள் மிகத் தீவிரமாக நடந்த வண்ணமே உள்ளன.


இதற்கு பேரினவாதம் கொண்ட உத்தி சத்தமில்லாத யுத்தமான போதை விதைப்பே. வடக்கு - கிழக்கில் அது மிகத் தீவிரம் பெற்று இன்று அகோரமாய் கிழந்தெழுந்து நிற்கிறது.

இளம் தமிழ் சந்ததி இனி கல்விபற்றியோ, நாட்டுப்பற்று பற்றியோ சிந்திக்கக் கூடாது என்பதற்கான திட்டம் முழு வெற்றியைக் கொடுத்திருக்கிறது. தவிர தமிழர் பிரதேசங்களை தொடர்ந்து அடாத்தாய் பிடிக்கும் செயற்றிட்டம் அரச இயந்திரங்களூடாக நடத்தவண்ணமேயுள்ளன.

இதில் பௌத்த துறவிகள், இன-மத வன்மன்தை தோற்றுவிப்பதில் முன்நிற்கின்றார்கள் என்பதுதான் வேதனையான விடயம்.

குருந்தூர்மலை விவகாரம், வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலய அடாத்து, தையிட்டி விகாரை போன்றவற்றை இதற்கு உதாரணமாக கூறிவிடமுடியும்.

இன-மத வன்மத்தைக் தூண்டும் பாரிய



பொறுப்பை அம்பிட்டியே சுமண ரத்தின தேரர் ஏற்றிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. அந்தளவிற்கு அவரின் அட்டூழியம் அதிகரித்த வண்ணமே உள்ளது.

அண்மையில் மட்டக்களப்பு தமிழர் பிரதேசத்திற்கு தனது சகாக்களுடன் சென்ற அம்பிட்டியே சுமண ரத்தின தேரர் தமிழர்களின் தலையை வெட்டுவேன். அதற்கு உங்களால் என்ன செய்ய முடியும் என பெரும் இன வன்மத்தைக் கக்கியிருக்கிறார்.

இங்கு நாம் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். அன்பை மட்டும் போதிக்கும் பௌத்தமத துறவி தமிழர்களின் தலையை வெட்டுவேன். அதற்கு தமிழர்களால் என்ன செய்ய முடியும் என பொது வெளியில் பகிரங்கமாகக் கேட்கிறார். அவருக்கான எந்தவித நடவடிக்கைகளையும் பாதுகாப்புத்தரப்பு இதுவரை மேற்கொள்ளவில்லை. இதே பேச்சை ஒரு தமிழர் சிங்களவர்களின் தலையை வெட்டுவேன் என்று பேசியிருந்தால் இன்றைய நாடு எப்படி இருந்திருக்கும். அவ்வாறு பேசியிருந்தால் அடுத்த கணமே அவர் பயங்கரவாதத்தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்பார்.

ஏன் இந்த வன்மம் என்பது தமிழர்களுக்கு இன்னமும் புரியவே இல்லை. இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளான தமிழினத்தின் மீது அப்படி என்ன காழ்புணர்ச்சி.

பயங்கரவாதத்தை அழித்துவிட்டதாய் மார்தட்டுபவர்கள் தமிழர்களை பயங்கரவாதிகளாகப் பார்ப்பதற்குள் இருக்கும் பொருள் என்ன.

பாதிக்கப்படுவது தமிழ் தரப்பு எனின் விளக்கம் விசாரணை இல்லை என்பது தான் இலங்கை நடைமுறையா?

அவ்வாறு நடைபெற்றால் அது வெறும் கண்துடைப்புக்கானதென்பதே என்பதை தமிழர்கள் நன்கறிவார்கள்.

சமீபத்தில் சரத்வீரசேகரவின் நீதித் துறைமீதும், முல்லை நீதிபதி மீதான விமர்சனமும் நீதித்துறை தலைகுனியும் அளவில் இருந்தது.

ஆனால் சரத் வீரசேகரவுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் இல்லை.

இன்று மட்டக்களப்பு அம்பிட்டியே சுமணரத்தின தேரர் தமிழர்களின் தலையை வெட்டுவேன் என்று பொது வெளியில் அச்சுறுத்தியிருக்கிறார்.

கண் துடைப்புக்கேனும் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவித்தல் இன்று வரை வரவில்லை. ஆக, தமிழர் என்றால் அவர்கள் பயங்கரவாதிகள். அவர்களை அடக்கி ஒடுக்கியே தீருவோம் என்று இன-மத வன்மத்தைத் தூண்டும் பேச்சுக்களை பேசும் பெரும்பான்மையினர் மீது அரசு நடவடிக்கை எடுக்காது.

அரசின் இந்த அசமந்தம் தமிழர்களின் கழுத்தை வெட்டுவேன் என்பது வெட்டுவதாய் அமைத்துவிடும்.

அவ்வாறு நடந் தால் அதன் விளைவு மிகப்பெரும் பிரள யத்தை ஏற்படுத்திவிடும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

ஊடகவியலாளராக இருந்து பின்னர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றிய கணேசலிங்கம் சதீஸ் அவர்கள் அண்மையில் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம்.

அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி, காங்கேசன்துறையில இருக்கிற ஜனாதிபதி மாளிகையை சிலிற் (SLIT) தனியார் பல்கலைக்கழகத்திற்கு ஐம்பது வருடக் குத்தகைக்கு வழங்கியதாகச் செய்திகள் வந்ததல்லோ. ஆனால் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில காங்கேசன்துறையில உள்ள ஜனாதிபதி மாளிகை இன்னும் எவரிடமும் கையளிக்கப்படவில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

அப்ப கையளிப்புத் தொடர்பாக வந்த செய்திகள் பொய்யோ.

**கங்காணியார்:-** காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகையை சிலிற் தனியார் பல்கலைக்கழகம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது என்பது உண்மையானது.

அது தொடர்பில் அந்தப் பல்கலைக்கழகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதில, குறித்த ஜனாதிபதி மாளிகையைக் குத்தகைக்கு வழங்குகின்ற நிகழ்வு நடந்த புகைப்படங்களை வெளியிட்டுள்ளதோடு, அந்த இடத்தில இருக்கிற ஆலயங்களை வழிபடுகிறதுக்கு எந்தத் தடையும் இல்லை யெண்டும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மூப்பர்:-** என்ன இருந்தாலும் காங்கேசன்துறையில இருக்கிற ஜனாதிபதி மாளிகையை வடக்கு மாகாண சபையைப்



## சங்கரியருக்குச் செய்த ஊழ்வினை சம்பந்தரை உறுத்தப்போகுது

பொறுப்பேற்குமாறு அப்போது முதலமைச்சராக இருந்த நீதியரசர் விக்னேஸ்வரனிடம் அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேட்டவர்.

ஆனால், அப்போது அதைப் பொறுப்பேற்பதற்கு எங்கட ஆட்கள் தயாரில்லை.

**சிறாப்பர்:-** அதெண்டால் உண்மைதான். இந்திய அரசாங்கம் யாழ்ப்பாணத்தில அமைத்த மத்திய கலாசார நிலையத்தை யாழ்ப்பாண மாநகரசபையினரைப் பொறுப்பேற்குமாறு இந்தியத் தூதரகம் கேட்டது.

ஆனால் கலாசார மத்திய நிலையத்தைப் பராமரிக்கிறத்துக்குப் போதிய நிதிப் பலம் யாழ்ப்பாண மாநகர சபையிட்ட இல்லை எண்டு காரணம் கூறி, கலாசார நிலையத்தைப் பொறுப்பேற்கவில்லை.

இப்ப கலாசார மத்திய நிலையத்தைப் பௌத்த சாசன அமைச்சு தன்ர பொறுப்பில எடுத்திருக்குது. அதற்குப் பிறகு தான் எங்கட ஆட்கள் ஒடித்திரியினம்.

**சாத்திரியார்:-** பொதுவில எங்கட தமிழ் அரசியல் தரப்புகளின்ர பலவீனம் இது தானே!

வருமுன்னர் காக்கிற வேலைகளைச் செய்யாமல் இருந்திட்டு, எல்லாம் முடியத்தான் குய்யோ கோவிந்தாவெண்டு கூப்பாடு போடுவினம்.

இந்தாப் பாருங்க தையிட்டியில விகாரைகட்டும் வரைக்கும் பேசாமல் இருந்திட்டு, விகாரை கட்டி முடிந்த பிறகு அதனை எதிர்த்து போராடுசிற நிலைமை இருக்குது.

கட்டும் போதே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தால் கட்டுமானப் பணிகளை நிறுத்துகிற சந்தர்ப்பமாவது ஏற்பட்டிருக்கும்.

**பண்டிதர்:-** மூப்பர் சொல்லுறது நூறுவீதம் உண்மை.

தையிட்டி விகாரைக்கு எங்கட நயினாதீவு நாக விகாராதிபதி கூட எதிர்ப்புத் தெரிவித்தவர்.

தமிழ் மக்கள் வாழ்கின்ற இடத்தில எதற்காக விகாரை கட்ட வேண்டும் என்று விகாராதிபதி கேட்ட கேள்வி சிங்கள மக்களையும் திரும்பிப் பார்க்க வைத்தது.அந்தளவிற்கு ஒரு பௌத்த பிக்கு கேட்கின்ற அளவில் எங்கட பக்கம் நியாயம் இருக்கு. ஆனால் விகாரை கட்டி முடிந்து கலச அபிசேகமும் நடந்தாயிற்று.

இந்த நிலையில விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போது அது நியாயம் அல்ல என்று பௌத்த சிங்கள மக்கள் நினைப்பினம்.

ஆகையால் எதையும் ஆரம்பத்திலேயே நாங்கள் நுள்ளி எறிய வேணும்.

அதவிட்டுட்டு வரட்டும் பார்க்கலாம் என்ற நிலைமை இருந்தால், தையிட்டியில தொடர் போராட்டம் நடத்திற நிலைமை தான் எல்லாவற்றுக்கும் ஏற்படும்.

**விதானையார்:-** அது சரி,கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் பதவி விலக வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளாரல்லோ. இப்ப எப்பிடி இருக்குது.

**வாத்தியார்:-** சுமந்திரன் எம்.பி கேட்டதில ஒரு பிழையும் இல்ல. ஏனெண்டால் சம்பந்தரால இனி ஏலாது. அவருக்கு 90 வயது. முதுமையின்ர அத்தனை கஷ்டங்களையும் அவர் அனுபவிக்கிறார். இந்த நேரத்தில சம்பந்தர் ஐயா தன்ர பதவியைப் பொருத்தமான ஒருவரிட்ட கையளித்து தமிழ் அரசியல் தலைமையைப் பாதுகாக்க வேணும்.

**கங்காணியார்:-** நீங்கள் இப்படிச் சொல்லுறியள். ஆனால் தமிழரசுக் கட்சியின்ர கொழும்புத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி தவராசா; சம்பந்தரைத் தூக்கி எறிந்து போட்டு கட்சியின்ர தலைமையை சுமந்திரர் கைப்பற்ற முயற்சிக்கிறார் எண்டெல்லோ குற்றம் சாட்டியுள்ளார்.

**மூப்பர்-** அட! சங்கதி அப்படியே போகுது. அப்ப இனி சம்பந்தர் கடுப்பாகுவார் போல...

**விதனையார்:-** சம்பந்தர் கடுப்பாகி என்ன செய்யிறது, வளர்த்த கடா மார்பில பாய்ந்து போட்டுது எண்டு குறைப்படலாமேயல்லாமல், வேறு எதுவும் செய்ய முடியாது.

**சிறாப்பர்:-** ஏன்? விதானையார் அப்படிச் சொல்லுறியள்.

**விதானையார்:-** இனி சம்பந்தன் ஐயாவால எழும்பி நடக்கக் கூட முடியாது. இந்த நிலையில அவரால அரசியல் களத்தில ஆடமுடியாது.

அதோட அவற்றை அரசியல் வரலாற்றில ஆனந்தசங்கரியருக்குக் கால்தட்டுப் போட்ட ஊழ்வினையும் தமிழ் மக்களின்ர நம்பிக்கைக்கு விரோதமாகச் செயற்பட்ட பாவமும் வந்துறுத்துமல்லோ. ஊழ்வினை வேலை செய்யத் தொடங்கிவிட்டால், அதைத் தடுக்க யாரால முடியும்.

அது தான் சொல்லுறன் சம்பந்தர் ஐயாவால இனி எதுவும் செய்ய முடியாதெண்டு.

இவ்வாறு விதானையார் கூற, ஆலடி நிசப்தமாகியது.நிசப்தத்தை ஊடறுத்த ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணி; இறை நம்பிக்கை யொன்று தான் எல்லோரையும் காப்பாற்றும் என்ற செய்தியைக் கூறுவது போல இருக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




“ தமிழர்களின் தலையை வெட்டுவேன் என்று கூறிய தேரரின் கூற்றுக்கு தமிழ் தலைவர்களின் பதில் என்ன வியாசரே?

யோகசுந்தரம்- துன்னாலை

### மதுவன் -மீசாலை

**தமிழர்களை வெட்டுவேன் என்கிறாரே சுமண தேரர்?**

அவர் இவ்வாறு இனவாதத்தை தூண்டுவதாய் பேசுவது இது முதல் தடவையல்ல.

ஆனால் அவரைக் கட்டுப்படுத்த எந்த அரசாங்கமும் முன்வரவில்லை என்பதற்குள் இருக்கும் இனவன்மத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

குறித்த செய்தி பிரசுரமான அன்றைய தினம் வலம்புரி அலுவலகத்திற்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது.

தமிழரை வெட்டுவேன் என்று கூறிய தேரரை தமிழர் பிரதேசத்தில் வந்து நின்று அவ்வாறு கூறச் சொல்லுங்கள் என ஒரு பெரியவர் மார்தட்டிப் பேசினார்.

அன்பைப் போதிக்கவல்ல தேரர் வன்முறையில் இறங்குகிறார் என்பதற்காக நாமும் வன்முறையைத் தேர்ந்தெடுத்துவிடக் கூடாது.

அவரை புத்தர் பார்த்துக் கொள்வார் விட்டு விடுங்கள் என்றேன் நான்.

### யோகசுந்தரம்- துன்னாலை

**தமிழர்களின் தலையை வெட்டுவேன் என்று கூறிய தேரரின் கூற்றுக்கு தமிழ் தலைவர்களின் பதில் என்ன வியாசரே?**

இதுவே தேர்தல் காலமாக இருந்திருந்தால் இன்றைக்கு நிலைவேறாக இருந்திருக்கும்.

இதோ இப்போதே நாங்களும் கத்தியை தூக்குகின்றோம். முடிந்தால் தமிழர்களின் தலையில் கை வைத்துப்பாருங்கள்.

தமிழர்களின் சுண்டுவிரல் நகத்தில் குண்டு மணியளவு இரத்தம் வந்தாலும் எதிரியின் கழுத்தை கொய்து தோரணமாக தொங்கவிடுவோம் என்று வடிவேலு பாணியில் வீர வசனம் பேசியிருப்பார்கள்.

இது தேர்தல் காலம் அல்லாததால் அவர்கள் இப்போது நித்திரை. ஆதலால் தேரரை தேர்தல் வரும்போது இந்த விடயத்தை பேசச் சொல்லுங்கள்.

அப்படி தேர்தல் காலத்தில் பேசுவாராக இருந்தால் நெருப்புப் பொறி பறக்கும் என்பதை எம் தோழர்கள் மீது ஆணையாகக் கூறிக் கொள்கிறோம்.

### நிந்து- யாழ்ப்பாணம்

**உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியின் தோல்விகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள் வியாசரே?**

ஆசியக் கண்டமான இந்தியாவில் நடைபெறும் உலகக் கிண்ணத் தொடரில் ஆசிய அணிகள் ஜொலிக்க வேண்டும்.

ஆனால் அதில் இலங்கை அணி சோபிக்கத் தவறி வருகிறது. இங்கிலாந்து அணியுடனான வெற்றி சற்று ஆறுதலைத் தந்திருந்தாலும் ஏனைய போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த இலங்கை அணி தவறிவிட்டது என்றே கூறவேண்டும்.

அடிக்கடி அணித் தலைவரை மாற்றும் இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் செயற்பாடும் இலங்கை அணியின் பின்னடைவுக்கு காரணம் எனலாம்.

வெற்றி,தோல்வி அணித் தலைமையில் தங்கியிருக்கிறது தான். ஆயினும் நூறு விகிதம் அது அணித் தலைவரின் கையில் இல்லை.

ஓரணியாக போராடினால் மாத்திரமே வெற்றியடைய முடியும்.

இதை உணர்ந்து விளையாடவேண்டிய கடைப்பாடு இலங்கை அணி வீரர்களுக்கு உண்டு.



### கனேஸ்- பருத்தித்துறை

**ஹமாஸ் அமைப்புடன் விடுதலைப் புலிகளை ஒப்பிட முடியாது என்கிறாரே சரத் வீரசேகர?**

தன் இனத்தின் விடிவுக்காகப் போரிட்டு தன் உயிரையே அர்ப்பணித்த ஒரு அமைப்பை அப்பாவி உயிர்களை பலி கொள்ளும் ஒரு அமைப்புடன் எப்படி ஒப்பிடுவது சொல்லுங்கள்?

அதனால் தான் சரத் வீரசேகர ஹமாசுடன் விடுதலைப் புலிகளை ஒப்பிட முடியாது என்று கூறியிருக்கிறார் போலும்.

அதுசரி சரத் வீரசேகர குண்டுச் சத்தமே கேட்காத இடத்தில் தான் தனது இராணுவ பணியை ஆற்றினார் என சரத் பொன்சேகா கூறியது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.

### திகான்- வடமராட்சி

**வல்லரசுகள் தமது ஆயுத விற்பனைக்காக விடுதலைப் போராட்டங்களை உருவாக்கிவிட்டு பின்னர் அவர்களை அழிக்கும் தந்திரோபாயம் பற்றி?**

ஆயுத உற்பத்தியில் பலம் மிக்க வல்லரசுகள் தமது பேரழிவு மிக்க ஆயுதங்களை சோதனை செய்யும் சோதனைக் கூடமாக பயன்படுத்துவது அபிவிருத்தி அடையாத, நெருக்கீடுகள் நிறைந்த தேசங்களிலேயே.

அந்தவகையில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அந்த சோதனைக் கூடமாக இருந்தது ஈழமண் என்பது வேதனை தரும் விடயம்.

அது இப்போது தடம் மாறி ஆப்கானிஸ்தான்,அதன் பின்னர் இப்போது காசாவில் வந்து நிற்கிறது.

இங்கு மடிந்து போபவர்கள் எல்லாம் அப்பாவிப் பொதுமக்கள் என்பது தான் மிகவும் வேதனையான விடயம்.

### விஜய்- உரும்பிராய்

**முல்லைத்தீவு நீதிபதிக்கு ஆதரவான கர்த்தால் இம்முறை முழுமையாக வெற்றி பெறாததற்கான காரணம் என்ன வியாசரே?**

ஒரு போராட்டத்தை முன்னெடுக்கப் போகிறோம் என்றால் முதலில் அது வெற்றி பெறுமா? என்ற கருத்துக் கணிப்பு முக்கியம்.

ஏனென்றால் அது தொடர்பில் பூரண கரிசனை கொண்டவர்கள் பொது மக்களே.

அதைவிடுத்து நான்கு அறைச் சுவருக்குள் இருந்து கொண்டு கடையடைப்புக்கு அழைப்பு விடுத்தால் எப்படி வெற்றிபெறும்.

மக்களின் மனங்களை அறிந்து கொண்டு நடந்து கொள்வதே அரசியல்வாதிகளின் வெற்றியை உறுதிப்படுத்தும்.

விடுத்து கண்டமேனிக்கு கடையடைப்பு, அது, இது என்று அழைப்பு விட்டால் அது தோல்வியிலேயே முடியும் என்பதை எமது அரசியல்வாதிகள் புரியாதவரை இவ்வாறான போராட்டங்கள் வெற்றியடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: உரிமைக்குரல்
இசை: மெல்லிசை மன்னர்
பாடியவர்: கே.ஜே.யேசுதாஸ்
வரிகள்: கண்ணதாசன்



கோவில் பெண் கொண்டது
தெய்வம் கண் தந்தது
பூஜை யார் செய்வது – இந்தப்
பூவை யார் கொள்வது

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி
உனக்காகவே நான் வாழ்கிறேன்

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி

மனதில் வடித்து வைத்த சிலைகள்– அதில்
மயக்கம் பிறக்க வைத்த கலைகள்
மேகங்கள் போல் நெஞ்சில் ஓடும்
வானத்தை யார் மூடக்கூடும்
உனக்காகவே நான் வாழ்கிறேன்

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி

கோவில் பெண் கொண்டது
தெய்வம் கண் தந்தது
பூஜை யார் செய்வது – இந்தப்
பூவை யார் கொள்வது
ஊமைக்கு வேறேது பாஷை?
உள்ளத்தில் ஏதேதோ ஆசை
உனக்காகவே நான் வாழ்கிறேன்

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி

தீபம் எரிகின்றது ஜோதி தெரிகின்றது
காலம் மலர்கின்றது கனவு பலிக்கின்றது
எண்ணத்தில் என்னென்ன தோற்றம் – என்
நெஞ்சத்தில் நீ தந்த மாற்றம்
உனக்காகவே நான் வாழ்கிறேன்

விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே
மஞ்சள் வானம் தென்றல் சாட்சி

# மாணவர்களை இலக்கு வைக்கும் போதைப்பொருள் வியாபாரம்!

போதைப் பொருட்களின் பாவனை தற்பொழுது யாழ்ப்பாணத்தில் அதிகரித்துக் கொண்டு செல்வது மிகவும் ஆபத்தானதொரு விடயம். ஒரு சமூகத்தின் இருப்பை அதன் தனித்துவத்தை கலைகலாசார பண்புகளை அடியோடு தகர்க்கும் ஓர் நடவடிக்கையாகவே இதனை பார்க்க வேண்டும். யாழ் குடாநாட்டில் இப்போதைப் பொருட்களின் பாவனை மெல்ல மெல்லமாக ஊடுருவ தற்பொழுது பாரிய சமூக பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இவ்விடயத்தில் விழிப்படைவதும் எழுச்சியடைவதும் காலத்தின் தேவை என்பதை யாழ்ப்பாண சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டிய தருணம்.

### இளைஞர்களின் நாட்டம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தனித்துவ அடையாளப் பண்புகளை சீர்குலைத்து அதனை அழித்தொழிக்கும் ஒரு நடவடிக்கையாக போதைப்பொருள் வியாபாரம் அரங்கேறியிருக்கிறது. இதற்குள் ஈர்க்கப்பட்ட சமூகத்தின் உயரிய சொத்தான இளைஞர்கள் போதைப்பொருட்களை பயன்படுத்தி தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுதுடன் இறுதியில் தங்களையும் அழிக்கும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர். வளமான சமூகத்தின் எதிர்காலம் இளைஞர்கள். அத்தகைய இளைஞர்களின் எதிர்காலம் இன்று போதைப் பொருள் பயன்பாட்டால் இருள்மயமாகி விட்டது.

இத்தகைய நிலைமை தொடருமானால் இளம் சமுதாயத்தின் அழிவு பேரவலமாக மாறிவிடும். போதையில் சுழலும் இளைஞர் கூட்டம் சமூகத்தின் அடையாளங்களின் தொலைவும் இதனால் உருவெடுக்கின்றது. போதைப் பொருட்களின் தாக்கம் சமூகத்தில் பல்வேறு விதமான பிரள்வுகளையும் பிரச்சினைகளையும் தோற்றுவித்து சமூகச் சீரழிவுக்கு வழிவகுக்கின்றது.

### இலக்கு வைக்கப்படும் மாணவர்கள்.

இத்தகைய அபத்தங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் தற்பொழுது யாழ்ப்பாணக் குடாநாட்டில் கல்வியை அழிக்கும் நடவடிக்கையின் நிகழ்ச்சி நிரலாக பாட சாலை மாணவர்களை இலக்கு வைத்து திட்டமிட்ட அடிப்படையில் போதைப் பொருள் வியாபாரம் முன்னெடுக்கப்படுவதான தகவல்கள் பேரியாக விழுந்திருக்கிறது. உலகின் பெரும் சொத்து கல்வி. அதனை தமிழ் மாணவர்களும் பெற்று இவ்வுலகில் வாழ்வாங்கு வாழவேண்டும். அதனையும் தடுக்கும் முகமாகவும் அழிக்கும் வகையிலும் பதின்ம வயதுடைய பாடசாலை சிறுவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் வியாபாரம் இடம்பெறுவதும் அதனை முழு வீச்சில் செயற்படுத்த நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருப்பதும் உண்மையில் திரைமறைவில் திட்டமிடப்பட்ட ஓர் நிகழ்ச்சி நிரலாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது.

மாணவர்களை இலக்கு வைக்கும் இச் செயற்பாடு ஓர் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையாக இருக்கலாம் என்ற ஐயத்தை எழச்செய்கிறது. பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கு பெற்றோர் அஞ்சுகின்ற சூழலை இவ்விடயம் ஏற்படுத்தியிருக்கிறது. மாணவர்களை இலக்கு வைக்கும் போதைப்பொருள் வியாபார செயற்பாடு, சமூகத்துக்கு ஆரோக்கியமானதொரு விடயமல்ல என்பதையும், இது எம்மையும் எமது சமூகத்தையும் பேரழிவுக்க கொண்டுசெல்லம் என்பதையும் எச்சரிக்கையுடன் உணர்ந்து கொள்ள வேண்டும்.

### ஒன்றுபட்டு மீட்போம்.

தற்பொழுது தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்களின் வியாபார சந்தையாக யாழ்ப்பாணம் மாறியிருக்கிறது என்பது மனவேதனை தரும் விடயம். தரை மற்றும் கடல் வழியாக இவை யாழ்ப்பாத்துக்கு கொண்டு வரப்படுகின்றன. இவற்றை கொண்டு வருபவர்கள், வியாபாரம் செய்பவர்கள் இதற்கு மூலதனமிடுபவர்கள் தொடர்பான விடயம் பரம இரகசியமாகவே இருக்கின்றது. இந் நிலையில் போதைப்பொருள் வியாபாரத்தின் கருவி மறைமுகமாக செயற்படுவது அதன் செல்வாக்கின் அதன் அதிகாரத்தின் உச்சத்தையே வெளிப்படுத்துகின்றது.

போதைப்பொருட்களின் பாவனையில் இருந்து பாடசாலை மாணவர்களைப் பாதுகாப்பது, இளைஞர்களை மீட்பதும் இன்றைய யாழ்ப்பாண சமுகத்தின் அவசரமான சவாலாக உள்ளது. இவ் விடயத்தில் யாழப்பாண புத்தி ஜீவிகள், கல்விமான்கள், நாட்டின் நிர்வாகத் துறை, சமுக ஆர்வலர்கள், சமுக அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆன்மீகத்தலைவர்கள் அனைவரும் ஒன்றுபட்ட கருத்தோடு கிராம ரீதியாக போதைப் பொருட்களுக்கு எதிராக ஒன்றுபடும் வேலைத் திட்டமொன்றை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டியது மிகவும் அவசியமானதாகும்.




எமது வீட்டுக்கு வெள்ளம் வரும் வரை அணை கட்ட மாட்டோம் என நாம் சிந்திப்போமனால் யாழ்ப்பாண இளைய தலைமுறையொன்று எமது கண்முன்னால் அழியும் பரிதாபத்தை பார்க்கும் வரம் பெறுவோம்.

**கோவையூர் ஜெயன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 321





இதன் காரணம் என்ன வென்பது பற்றி இளைய பிராட்டி வியப்புற்றாள். கொஞ்சம் பேச்சுக்கொடுத்துப் பார்க்கலாம் என்று எண்ணி, "சக்கரவர்த்தியும் நம்முடன் இருந்து இந்த அருமையான நாடகத்தைப் பார்க்க முடியாமற் போயிற்றே? பாட்டனார் சாதித்த இக்காரியங்களை இவரும் தம் காலத்தில் சாதித்திருக்கிறார் அல்லவா? அப்பாவுக்கு மட்டும் உடம்பு குணமானால்?" என்றாள்.

"தானே உடம்பு குணமாகிவிடுகிறது. அவருடைய செல்வப் புதல்வியும் இங்கு வந்துவிட்டீர்கள். இலங்கையிலிருந்து மூலிகையும் சீக்கிரம் வந்துவிட்டால் சக்கரவர்த்திக்கு நிச்சயம் உடம்பு குணமாகிவிடும்" என்றாள் நந்தினி.

"இலங்கையிலிருந்து மூலிகை வருகிறதா? அது என்ன?" என்றாள் குந்தவை.

"தெரியாதவரைப் போல கேட்கிறீர்களே! இலங்கையிலிருந்து மூலிகை கொண்டு வர பழையாறை வைத்தியர் ஆள் அனுப்பியிருக்கிறாராமே? தாங்கள்தான் ஆள் கொடுத்து உதவினீர்கள் என்று கேள்விப்பட்டேனே? அது பொய்யா?"

குந்தவைப் பல்லினால் உதட்டைக் கடித்துக் கொண்டாள். பார்ப்பதற்கு முல்லை மொட்டைப் போல் பல் வரிசை அழகாயிருந்தாலும் கடிக்கப்பட்ட உதடுகளுக்கு வலிக்கத்தான் செய்தது. நல்ல வேளையாக "நாவலோ நாவல்!" என்னும் பெருங்கோஷம் அச்சமயம் எழுந்தபடியால் அந்தப் பேச்சு அத்துடன் தடைப்பட்டது.

சுந்தர சோழரின் வன்மையும் வனப்பும், ஆயுளும் அரசும் வாழ்கென வாழ்த்திவிட்டு நாடகம் முடிவடைந்தது. சபையோர் கலைந்து குதூகல ஆனந்தத்தினால் ஆடிக்கொண்டு தத்தம் வீடு சென்றார்கள். சிற்றரசர்களின் தேவிமார்களும், அவர்களுடைய பரிவாரங்களுடன் சென்றார்கள். பின்னர், சக்கரவர்த்தினி வானமாதேவியும், மற்றுமுள்ள அரண்மனைப் பெண்டிரும் சோழர்குல தெய்வமான துர்க்கையம்மன் ஆலயத்துக்குப் புறப்பட்டார்கள்.

சுந்தரசோழர் உடல் நலம் எய்தும்படி மலையமானின் புதல்வி பல நோன்புகள் நோற்று வந்தார். துர்க்கையம்மன் கோயிலுக்கு அடிக்கடி சென்று அவர் பிரார்த்தனை செலுத்துவது உண்டு. நவராத்திரி ஒன்பது நாள் ராத்திரியும் துர்க்கையம்மனுக்கு விசேஷ பூஜைகள் நடந்தன. சக்கரவர்த்தியின் சுகத்தைக் கோரிப் பலிகள் இடப்பட்டன. ஒவ்வொரு நாள் இரவும் மகாராணி கோயிலுக்குச் சென்று அர்த்தஜாம பூஜைக்குப் பிறகு திரும்புவது வழக்கம். அரண்மனையின் மூத்த பெண்டிர் பலரும் மகாராணியுடன் ஆலயத்துக்குச் செல்வார்கள்.

இளம் பெண்களைத் துர்க்கை சந்நிதிக்கு அழைத்துப் போகும் வழக்கமில்லை. பூசாரிகள் மீது சிலசமயம் சந்நதம் வந்து அகோரமாக ஆடுவார்கள். சாபம் விளைந்த வரலாறுகளைச் சொல்லுவார்கள். இளம் பெண்கள் பயப்படக் கூடும் என்று அழைத்துப் போவதில்லை. ஆனால் இளைய பிராட்டியிடம் "நீ பயந்து கொள்வாய்!" என்று சொல்லி நிறுத்த யாருக்குத் தைரியம் உண்டு? அந்த ஒன்பது தினமும் தாய்மார்களுடன் குந்தவையும் துர்க்கை கோயிலுக்குச் சென்று அம்மனுக்குப் பிரார்த்தனை செலுத்தி வந்தாள். இச்சமயங்களில் வானதி தனியாக அரண்மனையில் இருக்க வேண்டி நேர்ந்தது.

பராந்தகத் தேவர் நாடகம் நடந்த அன்று இரவு வானதியின் உள்ளம் உற்சாகத்தினால் பூரித்திருந்தது. தன் குலத்து முன்னோர்கள் செய்த வீரச் செயல்களை அரங்க மேடையில் பார்த்து அவளுக்குப் பெருமிதம் உண்டாகியிருந்தது. அத்துடன் இலங்கை நினைவும் சேர்ந்து கொண்டது. ஈழப் போரில் இறந்த தன் தந்தையின் நினைவும், தந்தையின் மரணத்துக்குப் பழிவாங்கி வரச்சென்றிருக்கும் இளவரசரின் நினைவும் இடைவிடாமல் எழுந்தன. தூக்கம் சிறிதும் வரவில்லை. கண்ணிமைகள் மூடிக்கொள்ள மறுத்தன. இளையபிராட்டி ஆலயத்திலிருந்து திரும்பி வந்து அன்றைய நாடகத்தைப் பற்றி அவருடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தால் பிறகு தூக்கம் வரலாம் அதற்கு முன் நிச்சயமாக இல்லை.

வெறுமனே படுத்துப் புரண்டுகொண்டிருப்பதைக் காட்டிலும் அரண்மனை மேன்மாடத்தில் சற்று உலாவி வரலாமே என்று தோன்றியது.

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு

## யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### முதியோரைப் பேணுவோம்



அறிவு, ஆற்றல், அனுபவம், வயது ஆகியவற்றால் முதிர்ந்தவர்களையே நாம் முதியோர் என்கின்றோம். இவர்கள் தளர்ந்து தள்ளாடி பட்ட மரம் போல் செயலற்றுக்காணப்படுவார். தம் ஆயுட்காலம் இன்றோ நாளையோ முடியப்போகிறது. என எண்ணி இறுதிக்கட்டத்தில் இருப்பவர்களை நாம் பேண வேண்டியது மிக அவசிய மாகும்.

முதுமைப்பருவம் என்பது எல்லோராலும் விரும்பப்படுவதோன்றல்ல. ஞானிகள், பேரறிவாளர், செல்வந்தர் கூட முதுமையை வெறுக்கின்றனர். காரணம் முதுமைப்பருவம் சோர்ந்து அயர்ந்து காணப்படுவதாகும். அத்துடன் ஒடித்திரிந்து எக்காரியத்தையும் செய்யக் கூடிய உடல், உள ஆற்றல் மிகக்குறைவாகவே காணப்படுவதும் காரணமாகும்.

ஆனால் முதுமைப்பருவத்தை நாம் எக்காரணம் கொண்டும் வெறுக்கக் கூடாது. ஏனெனில் அது ஒரு இயற்கையின் நிகழ்வே.

## திருக்குறள் பாட்டு

ஒன்றே முக்கால் அடியாலே
உலகைக் கவர்ந்த திருக்குறள்
நன்றே செய்ய மனிதர்களை
நாளும் தூண்டும் திருக்குறள்

ஒன்றே குலமெனும் திருக்குறள்
உயர்வைப் பேசும் திருக்குறள்
என்றும் வாழும் திருக்குறள்
எவர்க்கும் பொதுவாம் திருக்குறள்

முப்பால் என்ற பெயர் கொண்டு
முழுமையை நல்கும் திருக்குறள்
எப்பொழும் நாம் படித்திட
ஏற்ற நூலாம் திருக்குறள்.

வள்ளுவர் தந்த திருக்குறள்
வாழ்வைப் புதுக்கும் திருக்குறள்
உள்ளம் கவரும் ஒரு நூலாம்
உலகம் போற்றும் பெருநூலாம்.

ம.கவிப்பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கப்டன் பெயரைச் சொல்லுங்கள் பார்ப்போம்!

**"தலைவன் எவ்வழியோ தொண்டனும் அவ்வழியே" என்பார்கள். அரசியலுக்கு மட்டுமல்ல, விளையாட்டுக்கும் இது பொருந்தும். நடப்பு உலகக் கோப்பையில் அணித் தலைவர்களின் செயற்பாடுமே அணிகளின் வெற்றி தோல்விகளில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.**

**ரோகித்**

'உலகக்கோப்பையை வென்றே ஆக வேண்டும்' என்ற ஒரே நோக்கத்தோடுதான் விராட் கோலியைப் பதவியிலிருந்து தூக்கி எறிந்துவிட்டு ரோகித்தை இந்திய அணியின் கப்டனாக மாற்றியது இந்திய கிரிக்கெட் வாரியம். எதற்காக கப்டன் ஆக்கப் பட்டாரோ, அந்த இலக்கை நோக்கி இந்தத் தொடரில் வேகமாகவே அணியை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கிறார் ரோகித்.



**பாபர் அசாம்**

பாகிஸ்தான் அணியின் கப்டன் பாபர் அசாமுக்கு இது ஒரு அழுத்தமான தொடராகவே இதுவரை இருந்திருக்கிறது. சீரான செயற்பாட்டைக் கொடுக் காமல் அணி தடுமாறிவருவது ஒரு தலைவலி என்றால், புறக்காரணங்கள் கொடுக்கும் மன உளைச்சலும் நெருக்கடியும் அவரை மேலும் அழுத் தத்திற்குள்ளாக்குகிறது. தனிப்பட்ட முறையில் பட்டிங்கிலுமே சிறந்த செயற்பாட்டை அவர் கொடுக் கவே இல்லை. பாபர் அசாம் ஃபார்முக்கு வருவதும் அந்த அணி அரையிறுதிக்குச் செல்வதும் ஒன்றை ஒன்று ஒத்த செயற்பாடாக இருக்கும்.

**ஸ்காட் எட்வர்ட்ஸ்தான்**

நடப்பு உலகக்கோப்பையில் அதிக கவனம் ஈர்த்திருப்பவர் நெதர்லாந்து அணியின் கப்டன் ஸ்காட் எட்வர்ட்ஸ்தான். "நாங்கள் ஆடிப்பாடி மகிழ்ந்திருக்க மட்டும் வரவில்லை. போட்டிகளை வெல்வ தற்காகவே வந்திருக்கிறோம். அரையிறுதிக்குச் செல்வதுதான் எங்கள் நோக்கம்!" என பெரும் உத்வேகத்துடன் நம்பிக்கையூட்டுகிறார் எட்வர்ட்ஸ். எதையாவது சாதித்துவிட வேண்டும் என்கிற துடிப்போடு கலக்கிவரும் நெதர்லாந்தை, தனிப்பட்ட முறையில் தன்னுடைய செயற்பாட்டின் மூலமும் ஒருபடி அதிகமாகவே கவனிக்க வைக்கிறார் ஸ்காட்.

**ஜாஸ் பட்லர்**

"எங்களை நடப்பு சம்பியன் (Defending Champion) என்று சொல்லாதீர்கள். எங்களுக்கு அந்த 'Defence' என்கிற வார்த்தையே பிடிக்க வில்லை' என்றார் ஜாஸ் பட்லர். பேச்சில் இருந்த வீரியம் அணியின் செயற்பாட்டில் இல்லை. பட்லரின் கீழ் ஒவ்வொரு வீரரும் சிறப்பாகச் செயற்பட முனை கிறார்களே தவிர, அணியாகக் கைகோர்க்க தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. பட்லரும் அதை எதிர்பார்ப்பதாகவும் தெரியவில்லை.

**டாம் லேதம்**

நியூசிலாந்து அணியின் கப்டனாக வில்லியம் சன்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால், தொடர் காயங்களால் அவரால் ஆட முடியவில்லை. டாம் லேதம் கப்டனாக தனக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார். சலனமே இல்லாமல் இருப்பதுதான் நியூசிலாந்து அணியின் பாணி. அதில் எந்தக் குழப்பத்தையும் விளை விக்காமல் அப்படியே தனது முன்னோர்களின் பாணியில் வழிநடத்துவதே டாமிற்கு வெற்றிதான். உலகக்கோப்பை ஏக்கத்தைத் தீர்க்க முடியும் என்கிற நம்பிக்கையை டாம் முதல் ஒரு சில போட்டிகளிலேயே ஏற்படுத்திருக்கிறார்.

**பவுமா**

தென்னாபிரிக்க அணி சீறிப்பாயும் அளவுக்கு அந்த அணியின் கப்டன் பவுமா பாய்வதே இல்லை. பவுமாவின் பின்னணியும் வரலாறும் இயல்பிலேயே அவருக்கு ஒரு ஊக்கத்தைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், அவரோ நல்ல நிலைமையில் இருக்கும்போது ஏற்பட்ட ஒரு தோல்விக்கே, தொடரை விட்டு வெளியேறியதைப் போன்ற அயர்ச்சியுடன் பேசியிருந்தார்.

**பேட் கம்மின்ஸ்**

பேட் கம்மின்ஸ் தலைமையில் அவுஸ்திரேலி யாவும் தென்னாபிரிக்க நிலையிலேயே இருந்தது. கப்டனையே ட்ராப் செய்துவிட்டு அணியை முன்னெடுத்துச் செல்லலாம் என்கிற பேச்செல்லாம் எழுந்தது. நிச்சயமாக ஆதிக்கம் மிக்க ஆஸியை வழிநடத்திய முன்னாள் கப்டன்களிடம் இருந்த சக்தி பேட் கம்மின்ஸிடம் இல்லைதான்.

**ஹஸ்மத்துல்லா**

ஆப்கானிஸ்தான் இந்த உலகக்கோப்பையில் எதிர்பார்த்த் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இங்கிலாந்தைச் சாய்த்தார்கள். அதோடு சரி. மற்ற போட்டிகளிலெல்லாம் ஓட்டை உடைசலாகத்தான் இருக்கிறது அவர்களின் செயற்பாடு. அவர்களின் கப்டனான ஹஸ்மத்துல்லா ஸ்பின்னர்களை இன்னும் சரியாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். ரஷித்கானின் இந்திய அனுபவத்தையெல்லாம் இன்னும் முழுமையாகக் கறந்திருக்க வேண்டும்.

**இலங்கை - வங்கதேசம்**

நடப்பு உலகக்கோப்பையில் பெரிதாக விவா தத்தை ஏற்படுத்தாத அணிகள் வங்கதேசமும் இலங்கையும்தான். ஆசியாவில் வைத்து இந்த உலகக்கோப்பை நடக்கிறது. தங்களின் எழுச்சியை இரு அணிகளும் இங்கிருந்து தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், இருக்கிற இடம் தெரியாமல் இருக்கிறார்கள். யோசிக்காமல் அந்த அணிகளின் கப்டன்கள் பெயரைச் சொல்லுங்கள் பார்ப்போம். கஷ்டமாக இருக்கிறதா? இதுதான் அவர்களின் நிலை.




# ஹமாஸ்சின் ஏவுகணை எழுச்சியும் இஸ்ரேலின் வான் பாதுகாப்பு ஓட்டைகளும்

நவீன உலகின் தலைசிறந்த வல்லரசுகளினுடைய வான் பாதுகாப்பு பொறிமுறைகளை அல்லது அதன் கட்டமைப் புக்களை சர்வதேச ஆயுதச் சந்தையின் முன் பெரும் கேள்விக்கு உட்படுத்தியுள்ளது பாலஸ்தீன ஆயுத அமைப்பான ஹமாஸ் போராளிகளின் இஸ்ரேல் மீதான அண்மைய ஏவுகணைத் தாக்குதல்கள்.

அதுவும் இருபது நிமிடங்களில் 5000 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை பாலஸ்தீனத்தின் காஸா பிராந்தியத்தில் இருந்து ஹமாஸ் போராளிகள் இஸ்ரேலின் மீது மழைபோல் பொழிந்து தள்ளி ஒரு யுத்த அறைகூவல் விடுத்தார்கள் என்பதே உண்மை.

இன்றைய இஸ்ரேலை எமனால் கூட நெருங்க முடியாது என கனவுலகில் மிதந்து கொண்டிருந்த அதன் தோழமை நாடான அமெரிக்காவுக்கு பாலஸ்தீனத்தின் ஆயுத அமைப் பான ஹமாஸ் போராளிகள் ஏவுகணை மூலம் ஒரு செய்தியை கூறியிருக்கின்றார்கள்.

தன்னை ஒரு சங்கிலி தொடர்போல் சுற்றியிருக்கும் பரம எதிரிகளான இஸ்லாமிய நாடுகளினதும் அதன் ஆயுத அமைப்பினதும் பிரமாஸ்திரம் போன்ற நவீன ஏவுகணைத் தாக்குதல்களிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்ள "அயர்ன்டோம்" என்ற உலகின் அதி நவீன சக்தி வாய்ந்த வான் பாதுகாப்பு பொறிமுறையை இஸ்ரேல் 2021 இல் அறிமுகம் செய்து தன்னை சூழ்ந்திருக்கும் இஸ்லாமிய நாடுகள் மத்தியில் ஒரு வல்லரசாகத் தன்னை காட்டிக் கொண்டது.

இந்த "அயர்ன்டோமை" பற்றிய மதிப்பானது 100ரில் 90வீதமான எதிரி நாட்டு ஏவுகணைகளை அதன் பாதையில் வைத்தே நடுவானில் அழிக்கும் திறன் பெற்றது என இஸ்ரேலிய இராணுவ ஆய்வாளர்கள் கௌரவத்துடன் மார்தட்டிக் கொண்டார்கள்.

இந்த "அயர்ன்டோம்" என்பது உலகிலேயே இஸ்ரேல் உருவாக்கிய அதிநவீன வான் பாதுகாப்பு கவசங்களில் அல்லது பொறிமுறைகளில் ஒன்றாகும். எதிரிகள் இஸ்ரேலின் இலக்குகள் மீது ஏவுகணைகளை ஏவுகின்றது போது அது வரும் பாதை அதன் வேகம், அதன் இலக்கு என்பவற்றை அதி நுட்பம் வாய்ந்த ரேடாரின் மூலம் துல்லியமாக பிரித்தறிந்து கணித்து அதன் கட்டுப்பாட்டு அமைப்புக்கு அனுப்பிய பின் அடுத்த நொடி தானாகவே லாஞ்சர்களை ஏவி எதிரிகளின் தாக்குதலை துவம்சம் செய்யும். இவையெல்லாம் கண் ணிமைக்கும் நொடிக்குள் முடிந்து விடும். இதுவே "அயர்ன் டோமின்" தனிச் சிறப்பம்சமாகும்.



2021 இல் அறிமுகமான இஸ்ரேலின் இந்த வான் பாதுகாப்பு பொறிமுறை சாதனமான "அயர்ன்டோமை" பாலஸ்தீனத்தின் ஹமாஸ் போராளிகள் நீண்ட நாள் ஆய்வு செய்த பின்னே கடந்த ஒக்டோபர் 7 இல் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியிருப்பதாக சில இரா ணுவ வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

சமகாலத்தில் எதிரிகளின் பல ஏவுகணைத் தளங்களில் இருந்து ஒரேசமயத்தில் இஸ்ரேலின் நிலைகள் மீது எண்ணற்ற ஏவுகணைகளை ஏவுகின்றபோது இந்த "அயர்ன் டோம்" வான் பாதுகாப்பு பொறிமுறையானது தனது அதிகூடிய செயற்திறனை மட்டுப்படுத்தி விடுகின்றது என்ற உண்மையை ஹமாஸ் போராளிகள் உலகின் முன் நிரூபித்து விட்டார்கள்.

உலகிலே அடக்கி ஒடுக்கப்படும் சிறுபான்மை இனங்கள் மீது அதிநவீன ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தி அவர்கள் சுதந்திரத்தையும் உரிமையையும் ஒருபோதும் பறித்து விட முடியாது என்பதையும் உலக வல்லரசுகள் புரிந்து கொள்ளும் காலம் வந்துள்ளது என்பதையும் இஸ்ரேல் - பாலஸ்தீனம் போர் உணர்த்தி நிற்கின்றது.

**சாம் - ரமேஸ்குமார்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஈழத்தின் புதையல்



உலகினில் தழைத்த ஓர் இன வீரம்
உறங்குது விதையாய் எம் நிலம் முழுவதும்

புதைந்திடும் ஈழப் புதையல் என்றோ
விரைந்திடும் பகைவரின் அழிவினை நோக்கி

காலம் கடந்த காவியம் என எண்ணி
காரிருள் படர்ந்த எம் நில அவலம்

புதைந்திடும் புதையல் கனவுகளாக
உறங்குது இன்றும் உலகவர் கண்முன்

உரிமை வேண்டி உயிர்தனை கொடுத்த
என் இன உறவுகள் சிதைந்த கதையை

கேட்பார் இல்லார் பேதையர் உலகில்
வாழ்வது கொடிய வெட்கம் என்பேன்

உதிரம் நிறைந்த ஈழம் ஒருநாள்
உரைக்கும் என்றோ என் இன அவலம்

ந. விதுஷன்,
யா/ஹாட்லிக் கல்லூரி.

## பணம்

பாசத்தைப்
பிரிக்கும்
நேசத்தை
மறைக்கும்
நன்றியை
மறக்கும்
உண்மையை
மறுக்கும்
உயிரையும்
பறிக்கும்

யோகர்.




## தேசத்தின் நலனுக்காய்

சிறப்புற கல்வி தனை
சீராக நாம் கற்றால்
வனப்புறு வாழ்வதனை
வையகத்தில் வாழ்ந்திடலாம் தெரிந்தும்
குடும்பத்தின் பசிபோக்க
குலக்கொழுந்துகள் நாம் தொழில்புரிந்
தோம். சொல்லவென்(ன்)னா வதைகள் பல
சொல்வதும் மகிமை இல்லை.
கட்டாயக்கல்வி
கடமைக்காய் வருகிறது - எம்
உள்ளத்து உணர்வுகளை
ஏளனங்கள் செய்கிறது.
வறுமையின் வலியறியா சட்டங்களும்
மனப்பாங்கு மேன்மையுறா
தலைமைகளும் சமூகத்தை மேம்படுத்த
வல்லதல்ல
கற்றோரே! பெரியோரே!!
கல்வித்துறையினரே!!!
எம்போன்றோர் நிலை அறியும்
நல்லாய்வுகளை மேற்கொண்டு
கல்வியினை
காலத்தின் தேவைக்காய்
கருத்தறிந்து சீர்திருத்தி
வறுமையின் கொடுமையினால்
வாட்டமுறும் எம்மவரை தூக்கி நிறுத்தி
நிலையான மேம்பாட்டை மேற்கொண்டால்
அகிலத்தை வென்று நாம்
அதிசயங்கள் ஆகிடுவோம், ஆக்கிடுவோம்.
கவிதையின் நோக்கம் - வெறும்
காகிதச் செய்தியல்ல
தேசத்தின் நலனுக்காய் ஒன்றிணைந்து
சிரத்தையுடன் தலையேற்று
செயல் வடிவம் கொடுப்போம்
எம் இனிய உறவுகளே!.

அழகன்.

## மௌனத்தின் தேடல்-692



## இன்று யாருளர்?

தெருவோரத்தில்
ஒரு பிச்சைக்காரன்
அழுகிப் புழுத்துக் கிடந்தான்
மூக்கைப் பொத்திக் கொண்டோர்
பலர் கண் மூடி சில்லறை
வீசியோர் சிலர் அன்பின் உருவம்
அன்னை தெரேசா அவ்வழிப்
போகையில் அவனைக் கண்டு
அணைத்துத் தூக்கி
விடுதியில் சேர்த்து
தாயினும் சாலப்
பணிவிடை செய்தாள்
இவர் போல்
இன்று யாருளர்?

பி.யதுர்சன் ,
கொக்குவில்இந்துக்கல்லூரி.

## மௌனத்தின் தேடல்- 693



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

ஏறும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## மேன்மையும் மென்மையும்

தள்ளாடும் வயதிலும் சிறிதும்
தளரா மனத் தென்புடன்
மேன்மையான அன்பைக் காட்டிய
அன்னை தெரசா மென்மையானவர்
என்பதால் வெண்மை நிறத்தையும்
மனதால் தொண்டையும் தெரிவு செய்தவர்
எப்படியும் வாழலாமென்று
என்னும் காலகட்டத்தில்
இப்படித்தான் வாழவேண்டுமென்று
விடாப்பிடியாய் வாழ்ந்து காட்டியவர்.

க.நாகராசா, நுணாவில்.

## பொக்கிஷம்

உண்மை அன்பினை உரைத்திட்ட அன்னை
உலகத்தின் உன்னதமான பொக்கிஷம்
அன்பினை அள்ளித் தந்து மழலையின் சிரிப்பில்
அகம் மகிழ்ந்திட அன்னை ஓர் ஆலயம்

ஆ.செல்வி திருநாவலூர்.

## கருணைத்தாய்

ஆதரவற்றோரை அன்புக் கரம் நீட்டி அரவணைத்து
தன்னுயிர் போல் மன்னுயிரை மதித்து
தன்னலமில்லா பிற நலனுக்காக தன்னையே
தன்னிகரில்லாத் தனிப்பெரும் கருணைக்கடல்

சி.மகாலட்சுமி,
கொக்குவில்.

## இன்றைய புரவலர்கள்

செய்தியைப் போட்டீர்கள்
ஏன் படத்தைப் போடவில்லையென
ஊடகங்களை இன்றைய
புரவலர்கள் கேட்கும் நிலையில்
அன்று ஓசைப்படாமல் அன்னை செய்த
அறப் பணிகள் எத்தனை எத்தனை

பி.மதுஷ்சன் ,தையிட்டி.

## பெறாமலே தாய்

தாயின் கருவறையிலிருந்து
மண்ணில் மலர்ந்ததும்
தாயன்பின்றி தவித்த
பல நூறு பேர்களுக்கு
தாயாகிய தாய்மை
பிள்ளை பெறாமலே
அகிலம் போற்றும்
அன்பு அன்னையாகி
பெரும்பேறு பெற்ற பெண்மை

மானிப்பாய்.

## மனித நேயம்

மனிதநேயம் கொண்ட
அன்னை திரேசாவின் சேவை
தனை இந்த உலகம் உணர்ந்து
அவர் வழி செல்லுமா?

க.திருமகள்,
பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்புறா




அத்தனை நேரம் மஞ்சளழகி சொன்ன சொற்களில் எத்தனை உண்மை புதைந்து கிடக்கிறதென்பதையும், இரண்டு நாடுகளின் சரித்திரத்தில் அவளை மட்டுமல்ல, தன்னையும் ஒரு வரலாற்றுக் காயாக நகர்த்தத் திட்டமிட்ட முயற்சி நடக்கிறதென்பதையும் சந்தேகமற உணர்ந்தான் சோழர் படைத்தலைவன்.

படகுகள் இருந்த இடத்துக்கும், தானும் மஞ்சளழகியும் உடகார்ந்திருந்த இடத்துக்கும் கூப்பிடு தூரம் இருந்த போதிலும், காலைக் கதிரவன் நன்றாக எழுந்துவிட்டதால் வாரி வீசிய கடுங்கதிர்களின் பேரொளி அந்தப் பிரதேசத்தை நன்றாகப் பளிச்சென்று அடித்திருந்ததால் படகுகளின் மறைவிலிருந்த உருவம் இளையபல்லவன் கண்களுக்கு நன்றாகவே தெரிந்தது. மறைவிலிருந்தபோதே தெரிந்த அந்த உருவம் சரேலென எழுந்து மறைவை விட்டு விலகியதும் கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகமும் இளைய பல்லவன் நெஞ்சிலிருந்து நீங்கிடவே, "அது" என்று சற்று தயக்கத்துடனேயே கேட்டான் அவன்.

அவன் எதைக் கேட்கிறான் என்பதை நன்றாக உணர்ந்து கொண்ட மஞ்சளழகி,"ஆம், என் தந்தைதான் என்று கூறியவள் மேற்கொண்டும் தந்தையின் போக்கை கவனிக்கும்படி இளையபல்லவனைத் தூண்டத் தன் காற் பெருவிரலினால் அவன் காலைச் சற்று அழுந்த மிதித்ததன்றி கண்களையும் தந்தை சென்ற புறத்துக்குத் திருப்பி உருட்டிக் காட்டினாள். அந்த திசையைக் கவனித்த இளைய பல்லவன் தனக்குப் புரியாத பல விஷயங்கள் தூரத்தே நடப்பதைக் கண்டு பெரும் வியப்புக்குள்ளாகி, அதன் காரணத்தைப் பற்றி மஞ்சளழகியிடம் வினவி உண்மையை அறிந்ததும் பெரும் பிரமிப்புக்கும் குழப்பத் துக்கும் உள்ளானான். அது மட்டுமல்ல, பெரும் தந்திரசாலியும் எடுத்த காரியத்தைச் சாதிக்க எதையும் செய்யத் தயங்காதவனுமாகிய கொடூரமான ஒரு மனிதனைத் தான் சமாளித்தாலொழிய அக்ஷய முனையை விட்டுத் தான் கிளம்புவது குதிரைக் கொம்புதான் என்பதையும் புரிந்து கொண்டான்.

காலை வெய்யிலில் கடலோரத்தில் உட்கார்ந்து காமன் கணைகளின் வசப்பட்டிருந்த மஞ்சளழகியையும்சாண்டில்யன்

இளையபல்லவனையும் நீண்ட நேரம் படகுகளின் மறைவிலிருந்தே கவனித்த பலவர்மன், திடீரெனப் படகுகளின் மறைவை விட்டு வெளியேறி மிகவும் நிதானமாக யவன கொள்ளையர் இருந்த குடிசைகளை நோக்கி நடந்தான், பிறகு தூரத்தே வந்துகொண்டிருந்த இரு கொள்ளையரைச் சைகை செய்து அழைத்துத் தன் பக்கத்தில் நிறுத்திக்கொண்டு, இளையபல்லவனும் தன் மகளும் இருந்த இடத்தைத் தன் கையால் சுட்டிக் காட்டினான். அடுத்தவிநாடி அந்த இடத்தில் நிற்காமல் மிகுந்த வேகத்துடன் கோட்டை வாயிலை நோக்கி விரைந்து சென்றான். அவன் சென்ற சில விநாடிகளுக்கெல்லாம் கொள்ளையர் இருவரும் தங்கள் துணைவிகளை அழைத்து வந்து இளையபல்லவனையும் மஞ்சளழகியையும் சுட்டிக் காட்டினார்கள். பிறகு அந்த நால்வரும் ஏதோ புரிந்துகொண்டதற்கு அறிகுறியாகத்

## பெண் ஜென்மம்

தலையை அசைத்து விட்டுத் தங்களிருப்பிடங்களை நோக்கிச் சென்று விட்டார்கள்.

பலவர்மன் அவர்களை அழைத்துத் தங்களைச் சுட்டிக் காட்டிச் சென்றதையும், பிறகு கொள்ளையரும் தங்கள் துணைவிகளை அழைத்து வந்து காட்டியதையும், அவர்கள் ஒருவருக்கொருவர் ஏதோ பேசிக் கொண்டதையும், பிறகு ஏதும் நடக்காதது போல் தங்கள் அலுவலைப் பார்த்துக் கொண்டு சென்று விட்டதையும் கண்ட இளைய பல்லவன் அத்தனைக்கும் பொருள் என்னவென்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் திணறினான். பருவப் பெண்ணொருத்தி, திடீரென அறிமுகமான ஒரு வாலிபனுடன் தனிமையை நாடுவதும் உடலுடன் உடலுராய உட்காருவதும் முறை பிசகான காரியமென்பதை அவன் உணர்ந்திருந்தான். அத்தகைய நிலையில் தன் பெண்ணைப் பார்க்கும் தந்தையின் மனம் எந்த நிலைக்குச் செல்லும் என்பதை அறிந்து கொள்வதும் அவனுக்கு ஒரு பெரிய காரியமில்லை.

(தொடரும்...)


---

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 28

## கவி வாசகம்

என்று தன்னிரக்கமாகவே பாடும் ஓர் ஏழை ஆன்மாவின் கெஞ்சல் மொழியாக ஒலிக்கிற போதும்

**"ஆமாறுன் திருவடிக்கே**
**அகங்குழையேன் அன்புருகேன்**
**பூமாலை புனைந்தேத்தேன்**
**புகழ்ந்துரையேன் புத்தேளிர்**
**கோமான்றன் திருக்கோயில்**
**தூகேன் மெழுகேன் கூத்தாடேன்**
**சாமாறே விரைகின்றேன்"**



என்று குற்றமுள்ள நெஞ்சாய்க் குறுகுறுக்கிற போதும்,

**"ஆடுகின்றிலை கூத்துடை**
**யான்கழற்கு அன்பிலை**
**என்புருகிப் பாடுகின்றிலை**
**பதைப்பதுஞ் செய்கிலை கணிகிலை**
**பாதமலர்**
**சூடுகின்றிலை சூட்டுகின்றது**
**மிலை துணையிலிபிணநெஞ்சே!**
**தேடுகின்றிலை தெருவுதோறல**
**றிலை செய்வதொன் றறியேனே."**

என்று தன் குற்றங்களை நெஞ்சோடு கிளத்தி நெக்குருகும் போதும் பக்தி நெறி ஒன்றாமலேயே பரமன் பதத்தைப் பற்ற நினைக்கும் வேணவாவின் வெளிப்பாடாகவே திருவாசகம் நடக்கிறது.

ஓர் ஆன்மா, இறை வட்டத்திற்குள் நுழைவதற்கான படிகளையே திருச்சதகம் பாடுகிறது. இறைவனை எய்துவமுன், மாசற்ற உள்ளமாகப் பக்தி மனம் பதப்படுத்தப்படுகிறது.

1.மெய்யுணர்தல் 2. அறிவுறுத்தல் 3. கட்டறுத்தல் 4. ஆத்ம சுத்தி 5. கைம்மாறு கொடுத்தல் என்ற நிலைகளில் படிப்படியாக நடந்து பத்தாவது நிலையில் "ஆனந்தாதீதம்" எய்துகிறது அழுத ஆன்மா.

முதலில் இருந்த பாவமனமும் பக்குவமடையாத பாழ்மனம். அதுவோ

**"வேனில்வேள் மலர்க்கணைக்கும்**
**வெண்ணகை செவ்வாய்க்கரிய**
**பானல் ஆர் கன்னியர்க்கும்**
**பதைத்துருகும் பாழ் நெஞ்சு"**

அம்மட்டுமோ?

**"வேனில் வேள் கணைகிழந்தின**
**மதி சுடும்**
**அது தனை நினையாதே**
**மான் நிலாவிய நோக்கியர் படிநடை**
**மத்திடு தயிராகி**
**மாய்ந்த நெஞ்சு."**

அந்த நெஞ்சுதான் உண்மை தெளிந்த தன்னை நினைத்து உலகியல் வட்டத்திலிருந்து விடுவித்துக் கொண்டு இறை வட்டத்திற்கு ஏக நினைக்கிறது.

நாயன்மார் ஆழ்வார் பாடல்களில் அடி நாமாக ஓர் அவலக் குரல் பாட்டுக்குள்ளிருந்து கேட்டுக் கொண்டே இருக்கிறது. மணிவாசகர் பாட்டில் அந்தக் குரலைப் பிரித்தறியவும் முடிகிறது.

**"வாழ்த்த வாயும் நினைக்க**
**மடநெஞ்சும்**
**தாழ்த்தச் சென்னியும் தந்த**
**தலைவனை**
**சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே**
**வீழ்த்த வாவினை யேன்."**

என்ற அப்பர் பாட்டில் ஒரு தன்னிரக்கமான ஏக்கம் பின்னிக் கிடப்பதைப் போலவே மணிவாசகர் பாட்டிலும்.

**"உள்ளந்தான் நின்றுச்சி யாவும்**
**நெஞ்சாய்**
**உருகாதால் உடம்பெல்லாம்**
**கண்ணாய் அண்ணா**
**வெள்ளந்தான் பாயாதால்**
**நெஞ்சம் கல்லாம்**
**கண்ணிணையும் மரமாந்தீ**
**வினையி னேற்கே..."**

என்று அதே உட்தொனியில் ஓர் அவலம் ஒலிக்கிறது.

**"குற்றாலத் தமர்ந்துறையும்**
**கூத்தாநின் குரைகழற்கே**
**கற்றாவின் மனம்போலக்**
**கசிந்துருக வேண்டுவனே."**

என்றெல்லாம் பாடி, ஆண்டவனை அடைவதற்கு அடியவர்கள் அழுகையினையே ஏணியாகப் பயன்படுத்துகிறார்கள்.

இந்த அழுகையின் குரல் சொற்களுக்கடியில் ஒலித்துக் கொண்டே இருப்பதால்தான், உருக்கம் பாடல்களில் உறைந்து கிடக்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

371

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# உடல்நிறையைப் பேணுவது வாழும் காலத்தை கூட்டும்

ஒருவர் அளவான உடல் நிறையைப் பேணுவது அவர் வாழும் காலத்தை அதிகரிக்கச் செய்வதுடன் அவரின் செயற்றிறனையும் கற்கும் திறனையும் கூட்டும் என்பது பல ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நிறையை சரியான அளவில் பேணாதவர்களுக்கு நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், பாரிசவாதம், மூட்டு சம்பந்தமான நோய்கள், நாரி சம்பந்தமான நோய்கள், புற்று நோய்கள், மாரடைப்பு, நுரையீரல் சம்பந்தமான நோய்கள், மாதவிடாய்கோளாறுகள், கர்ப்பம் தரிப்பதில் தாமதம், குடும்ப வாழ்வில் ஆரோக்கிய குறைவு போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் ஆகும்.

சீனி, சர்க்கரை, பனங்கட்டி அல்லது இவை சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவுகள் அல்லது பானங்கள் போன்றவற்றை சிறிதளவு உட்கொண்டாலும் பெரும் நிறை அதிகரிப்பு ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. காரணம் இவற்றில் இருக்கும் கலோரி அடர்த்தி அதிகமாகும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி என்பவற்றிக்குப் பதிலாக இனிப்பூட்டிகள் அல்லது சுவையூட்டிகளை பயன்படுத்தலாம். இவற்றின் சுவை சீனியை ஒத்ததாக இருக்கும். ஆனால் நிறை அதிகரிப்பு எதனையும் ஏற்படுத்தாது. நீரிழிவு இல்லாதவர்களும் இதனைப் பயன்படுத்த முடியும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி போன்றவற்றுடன் ஒப்பிடும் போது இந்த இனிப்பூட்டிகள் பாதுகாப்பானவை மட்டுமல்ல நிறை அதிகரிப்பையும் ஏற்படுத்தமாட்டாது.



இதேபோன்று எண்ணெய் அல்லது எண்ணெயில் பொரித்த உணவுவகைகளும் பட்டர், மாஜரின் போன்றவற்றையும் சிறிய அளவு உணவில் சேர்த்தாலும் அதிகளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்த வல்லன. நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், ஒலிவ் எண்ணெய் போன்ற எண்ணெய் வகைகள் உட்பட எல்லா எண்ணெய் வகைகளும் நிறை அதிகரிப்பை ஏற்படுத்தவல்லன. மிக்சர், வடை, ரோல்ஸ் ஏனைய பொரியல் வகைகள், தேங்காய் அதிகளவு சேர்த்த உணவுவகைகள், எண்ணெய் சேர்த்து செய்யும் உணவுவகைகள் போன்றவற்றில் எண்ணெயின் வீதம் அதிகமாக இருப்பதால் இவற்றில் சிறிதளவை உட்கொண்டால் கூட பெருமளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தும்.

நிறைகுறைப்பு முயற்சியில் ஈடுபடுபவர்கள் சுவைக்காகவும் பசியை போக்குவதற்காகவும் ஆரோக்கியத்திற்காகவும் அடிக்கடி உண்ணக்கூடிய உணவுவகைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். பழவகை குறிப்பாக கொய்யா, தோடை, அப்பிள், ஜம்பு, விளாம்பழம், பப்பாசி, வாழைப்பழம், நாவல் போன்றன. அத்துடன் எல்லாவிதமான மரக்கறிவகைகள் குறிப்பாக அகத்தி, முருங்கை, கோவா, கரட், பீற்றூட், தக்காளி, முள்ளங்கி, கீரைவகை, பயிற்றை,வெங்காயம், போஞ்சி, சிறகவரை, லீக்ஸ் போன்றவை. இத்துடன் பானங்களான மோர், இனிப்பூட்டிகள் சேர்த்த சீனி சேர்க்காத தேநீர், கோப்பி, பால், தேசிக்காய்த்தண்ணீர், குத்தரிசிக்கஞ்சி, தோடம்பழச்சாறு, இளநீர் போன்றவற்றை குறிப்பிடலாம். பால், முட்டை, மீன், இறால், தானிய வகைகள் போன்றவற்றை போதிய அளவு உணவில் சேர்த்துக்கொள்வது நன்மை பயக்கும். இவை எமக்கு அதிகளவு புரதத்தை வழங்குவதுடன் பசியை கட்டுப்படுத்தவும் உணவில் சுவையை கூட்டுவதற்கும் உறுதுணையாக இருக்கும்.

நிறைகுறைப்பதில் மட்டும் கவனம் செலுத்தாது உடல் ஆரோக்கியத்துடன் நிறை குறைப்பதில் அக்கறை செலுத்த வேண்டும். இதற்கு உடற்பயிற்சி மிகவும் உறுதுணையாக அமையும். உணவு வீணாகப் போகிறதே என்ற உணர்வில் மிகுதி உணவுகளை உண்ணும் பழக்கத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பசிக்காத வேளைகளில் மிகுதி உணவை உண்டால் உடம்புதான் வீணாகிப் போகும்.

பிறரின் வற்புறுத்தலிற்காக உணவு உண்ணுவதையும் உணவு உண்ணுமாறு ஒருவரை வற்புறுத்துவதை ஒரு உபசாரமுறையாகக் கடைப்பிடிப்பதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். பசிக்காத வேளையில் ஒருவரை உண்ணுமாறு வற்புறுத்துவது அவரை நோயாளி ஆக்கும் படிமுறையாக அமைத்துவிடும். உணவு அருந்துவதற்கு 10 நிமிடங்கள் முன்னதாக பழங்களை உண்டு அதன்பின்னர் உணவை அருந்துதல் நல்லது. இது உண்ணும் உணவின் அளவைக் குறைத்துக் கொள்ள உதவியாக இருப்பதுடன் போதுமான உணவு உண்ட திருப்தியை ஏற்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.

உணவை ஆறுதலாக உண்ணப் பழக வேண்டும். இது குறைந்தளவு உணவுடன் பசியைப் போக்கவும் போதுமான அளவு உணவு உண்ட திருப்தியை ஏற்படுத்தவும் உதவும்.

சாப்பாட்டுக் கோப்பைகளையும் கரண்டிகளையும் சிறியனவாக தெரிவு செய்து வைத்திருப்பது பயன்தரும். இதன்மூலம் அளவுக்கதிகமான உணவு உட்கொள்ளப்படுவதை குறைத்துக்கொள்ள முடியும். தேநீர் கோப்பையையும் சிறியதாக தெரிவு செய்து வைத்திருப்பது நல்லது.

தினமும் ஒரே வகையான உணவுவகைகளை உண்பதிலும் பார்க்க நிறத்தாலும் சுவையாலும் வாசனையாலும் மாறுபடும் வெவ்வேறு வகையான உணவுகளை மாறிமாறி உண்பது உடலுக்கும் மனதுக்கும் ஆரோக்கியத்தையும் புத்தூக்கத்தையும் தருவதுடன் பசியைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியமான நிறை குறைப்பிற்கு வழிவகுக்கும். ஒரே வகையான உணவு வகைகளை உண்ணுவதன் மூலம் எல்லா வகையான சத்துக்களையும் பெற்றுக்கொள்ள முடியாது.

முயற்சிக்கும் ஊக்கத்திற்கும் பெயர்போனவர்கள், தியாகத்திற்கு சிகரம் வைத்தவர்கள், சேமிப்பிற்கும் கொடைக்கும் இலக்கணம் வகுத்தவர்கள், கல்வியில் கரை கண்டவர்கள், நினைத்த இலக்கை அடையும் வரை உழைக்கும் நெஞ்சுரம் கொண்டவர்கள் உடல் பருத்து உயிர்விடுவதா?

நிறையை குறைப்போம் என்று உறுதி எடுப்போம். அதற்கான ஆர்வத்தை விதைத்து வளர்ப்போம். உடற்பரிமாணங்களைப் பேணும் கலையை கற்றுத் தெளிவோம். இதை நடைமுறைப்படுத்த திடசங்கற்பம் எடுப்போம்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச சபை
# 2024 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், வாகனத் தரிப்பிடமும் மலசலகூடமும் என்பவற்றை 01.01.2024 தொடக்கம் 31.12.2024 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 30.10.2023 முதல் 13.11.2023 மதியம் 12.00 மணி வரை
(அலுவலக நாட்களில்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :-13.11.2023 பி.ப 01.00 மணி வரை
(அலுவலக நாட்களில்)

கேள்வி திறக்கும் திகதி :- 13.11.2023 பி.ப 02.00 மணி

| தொ .இல | சந்தைகளின் பெயர் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | 2024 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிபுலம் மீன் சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 42,460.00 |
| 2 | வேலணை அம்பிகை நகர் மீன் சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 17,600.00 |
| 3 | சரவணை மீன் சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 9,860.00 |
| 4 | அல்லைப்பிட்டி மீன் சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 133,650.00 |
| 5 | நயினாதீவு மீன் மரக்கறிச்சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 38,100.00 |
| 6 | மண்டைதீவு வாராந்த சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 11,550.00 |
| 7 | சாட்டி வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் உள்ளடங்கலான சுற்றுலாமையம் ( படகு சேவை தவிர்த்து) | 2,000.00 | | 5,000.00 | 341,000.00 |
| வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனைச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும் | | | | | |
| 8 | வேலணை துறையூர் மீன் சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 220,000.00 |
| 9 | கடை இல - 02 | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 35,200.00 |
| 10 | கடை இல – 03 சிற்றுண்டிச்சலை | 2,000.00 | 1,500.00 | 5,000.00 | 133,000.00 |
| 11 | கடை இல – 04 | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 36,150.00 |
| 12 | கடை இல - 05 | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 38,500.00 |
| 13 | கடை இல – 06 கோழிக்கடை | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 37,600.00 |
| வேலணை பொதுச்சந்தை (6ம் வட்டாரம்) | | | | | |
| 14 | மீன் மரக்கறிச்சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 39,050.00 |
| 15 | சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | 1,750.00 | 5,000.00 | 27,600.00 |
| 16 | கோழிக்கடை . | 2,000.00 | 750.00 | 5,000.00 | 230,500.00 |
| புங்குடுதீவு முற்றவெளிச் சந்தையும் கடைத்தொகுதியும் | | | | | |
| 17 | கோழிக்கடை | 2,000.00 | 500.00 | 5,000.00 | 170,500.00 |
| 18 | கடை இல – 05 சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | 600.00 | 5,000.00 | 51,700.00 |
| 19 | புங்குடுதீவு முற்றவெளி மீன் மரக்கறிச்சந்தை | 2,000.00 | --------- | 5,000.00 | 115,500.00 |
| நயினாதீவு கடைத்தொகுதி | | | | | |
| 20 | கடை இல - 01 | 2,000.00 | 1,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 21 | கடை இல - 02 | 2,000.00 | 1,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 22 | கடை இல - 03 | 2,000.00 | 1,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 23 | கடை இல - 04 | 2,000.00 | 1,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 24 | கடை இல - 05 | 2,000.00 | 1,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 25 | கடை இல - 06 | 2,000.00 | 1,100.00 | 11,000.00 | 132,000.00 |
| 26 | கடை இல - 06 | 2,000.00 | 1,100.00 | 11,000.00 | 132,000.00 |
| 27 | கடை இல - 07 | 2,000.00 | 900.00 | 9,000.00 | 108,000.00 |

பொதுவான நிபந்தனைகள்:- சந்தைகள்

1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2) தவறுநர் பட்டியலில் உள்ளவர்கள் கேள்வி கோரலில் பங்குபற்ற முடியாது.
3) கேள்வியில் பங்குபற்ற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.
4) கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை "செயலாளர், பிரதேசசபை, வேலணை" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியில் "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் " என்ற முகவரிக்கு 13.11.2023 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
5) பொதுச்சந்தைகளில் இருந்து 500 மீற்றர் சுற்றளவுள்ள எல்லைக்குள் மரக்கறி, பழங்கள், தேங்காய், கோழி இறைச்சி போன்ற பொருட்கள் விற்பனை செய்ய முடியாது.
6) கடைகள், இறைச்சிக் கடைகள் வருடாந்த உரிமத்தினை செலுத்துதல் வேண்டும்.
7) தெரிவு செய்யப்படும் சந்தைகளின் சித்திகர கேள்விதாரர் சித்திகர தொகையின் 1/3 பங்கினையும் தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடையின் சித்திகர கேள்விதாரர் சித்திகர தொகையின் 2/3 பகுதியினையும் 20.11.2023 திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.
8) சந்தையை குத்தகைக்கு எடுப்பவரினால் சந்தையில் மேற்கொள்ளப்படும் அறவீடுகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கப் படுதல் வேண்டும்.
9) வாகனத்தரிப்பிடம், மற்றும் பொது மலசலகூடத்தினைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக அறவீடுகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாது.
10) சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரியாக அறவிடக்கூடாது.
11) செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மீறும் பட்சத்தில் குறித்த ஒப்பந்தத்தை இரத்து செய்யும் உரிமை பிரதேச சபைக்கு உண்டு.

நிபந்தனைகள் - கடைத்தொகுதி

1. கேள்வி கோரும் ஒவ்வொரு வியாபார நிலையங்களுக்கும் கேள்விப் பத்திரங்கள் தனித்தனியாக மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
2. கேள்வி கோரலில் சித்திபெற்றவர்கள் குறித்த கேள்வித் தொகையினை (Key money) ஒரே தடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.
3. மூன்று மாத வாடகையினை முற்பணமாக செலுத்துதல் வேண்டும்.
4. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறும்பட்சத்தில் அதற்கான தாமதக் கட்டணப்பணமாக குறித்த மாத வாடகைத் தொகையில் 10% அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகைப் பணத்தினை டிசம்பர் மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்துதல் வேண்டும்.
5. வருடந்தோறும் சபையினால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி அல்லது வியாபார உரிம கட்டணத்தினை செலுத்தி வியாபார அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
6. கடைகள் யாவும் தற்போதுள்ள நிலையிலேயே வழங்கப்படும்.
7. பராமரிப்பு வேலைகள் மற்றும் கழிவகற்றல் என்பவற்றை சபையின் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி தாங்களே மேற்கொள்ளல் வேண்டும்.

- மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.
- குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு உடன்பட வேண்டும் என்பதுடன் விதந்துரைக்கப்படாத விடயங்கள் தொடர்பில் சபையின் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

**திரு.தி.தியாகச்சந்திரன்,**
**செயலாளர்,**
**வேலணை பிரதேச சபை.**
திகதி:- 29.10.2023 .

(சி- 7510)

# திருமண விருந்தில் கலந்து கொண்ட இளம் பெண் திடீர் மரணம்

(புத்தளம்)

நண்பியின் திருமண நிகழ்வில் கலந்துகொண்ட இளம் யுவதியொருவர் திடீரென சுகயீனமடைந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதி காலை உயிரிழந்துள்ளார்.

புத்தளம், ஆனமடுவ - தசநாயக்க புரத்தைச் சேர்ந்த 20 வயதுடைய யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளத்தில் உள்ள தனது நண்பியின் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக கடந்த வியா ழக்கிழமை இரவு புத்தளத்திற்கு குறித்த யுவதி சென்றுள்ளார்.

திருமண நிகழ்வில் கலந்து கொண்ட யுவதி திருமண விருந்தை அருந்திய பின்னர் தனது உடல் நிலை சரியில்லை எனவும் உடனடியாக தான் வீட்டுக்குச் செல்ல வேண்டும் எனவும் நண்பியிடம் கூறிவிட்டு அங்கிருந்து முச்சக்கர வண்டி ஒன்றில் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். அவர் உடனடியாக புத்தளம் தள வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த யுவதி க்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் அந்த யுவதி வெள்ளிக் கிழமை அதிகாலை 2 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த யுவதியின் சடலம் மீதான மரண விசாரணை பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (நி)

# நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்த்தியுடன் மோட்டார் சைக்கிள் மோதி இளைஞன் பரிதாபமாக பலி

(கொழும்பு)

வீதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கொள்கலன் பாரவூர்தியின் பின்புறம் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பொரளை - கொடகம பனா கொட வீதியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

ஹோமாகம பிரதேசத்தில் வசிக்கும் 20 வயதுடைய இளைஞனே இந்த சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞன் வேலை முடிந்து மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் அத்துருகிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு விருது வழங்கி வைப்பு

(கிளிநொச்சி)

வட மாகாண சிறுவர் பராமரிப்பு மற்றும் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தினால் வட மாகாணத்தில் உள்ள 36 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலும் 2022 ஆம் ஆண்டினை மையப்படுத்தி பிள்ளைகளின் அபிவிருத்தி சார்ந்து மேற்கொள்ளப்பட்ட விடயங்களினை பல்துறைசார் செயற்பாடுகளினையும் தனித்தனியாக ஆய்வு செய்து புள்ளிகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல பெண்கள் பிரிவு மாகாண ரீதியில் முதலாம் இடத்தினையும் மற்றும் ஆண்கள் பிரிவு மாகாண ரீதியில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளது.

இவ்விருதானது வட மாகாண பிரதம செயலாளர் சமன்பந்துலசேனவால் வழங்கி வைக்கப்பட்டது. (நி)





தருமபுரம் பகுதியில் அமைந்துள்ள அரசினர் தமிழ் கலைவன் பாடசாலையில் 65 ஆவது ஆண்டினை நிறைவு செய்யும் வைரவிழா நிகழ்வு நேற்று பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. (படம்- தேவானந்தன்)

## இயற்கையும் அரசும் எம்மை ஏமாற்றுகிறது கிளிநொச்சி விவசாயிகள் கவலை

(தருமபுரம்)


இயற்கையாலும் அரசாங்கத்தாலும் ஒவ்வொரு தடவையும் தாம் ஏமாற்றப் படுவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டனர். கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும் போகம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையில் உரிய காலத்தில் மழையும் கிடைக்கவில்லை அடிக்கட்டு உரத்தை கூட இட முடியாத நிலையில் நாம் உள்ளோம்.

கல் மடுக்குளத்தின் புணரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதால் குளத்திலும் தண் ணீர் இல்லை உரிய காலத்தில் உள்ளீடுகளை இட்டால் தான் உரிய பயனை பெற முடியும். அத்துடன் நெல்லுக்கான உரிய விலையும் எமக்கு கிடைப்பதில்லை என அவர்கள் தெரிவித்தனர். (நி - 316)



கிளிநொச்சி கண்டவளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கோரக்கண் கட்டு கிராம சேவர் பிரிவின் கீழ் வை எம் சி குடியிருப்பு திட்டத்தில் மிகவும் வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பம் ஒன்றுக்கு எஸ் கே நாதன் சுமார் 20 லட்சம் பெறுமதியான வீடு ஒன்றை புதிதாக நிர்மாணித்து தனது மகளின் பிறந்த தினத்தின் ஞாபகார்த்தமாக நேற்று பயனாளிகளிடம் கையளித்தார். (படம்-தேவானந்தன்)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கைவேலி எனும் கிராமத்தில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு பல்வேறு இன்னல்களுடன் வாழ்ந்து வருகின்ற குடும்பம் ஒன்றிற்கு ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பினரால் நிரந்தர வீடு ஒன்று அமைத்து நேற்று அமைப்பின் உறுப்பினர்களால் குடும்பத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. (படம்-சதீஸ்)






விதுரன்




நந்தன்




தவனேஷ்




நர்மதா




யாழினி




நிறைஞ்சனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைப் பண்பு என்பது தற்சார்பற்று இருத்தல் நலம். தன்னலம் கருதிய தலைமை இன்றைய நிலைமையில் நிர்வாகத்தை தலைகீழாக மாற்றும் வல்லமை கொண்டது. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை முடக்கும் நோக்கமா?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமையப்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி என்பது தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமை சார்ந்த விடயம்.

ஆம், வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்பில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

ஒரு பெரும் இன அழிப்பாக நடந்த இக்கொடூரம் இன்றுவரை தமிழின அழிப்பாக – போர்க்குற்றமாக – சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டிய மனிதப் பேரவலமாக கருதப்படுகிறது.

தவிர, வன்னிப் பெருநிலப்பரப்பில் இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது நடத்திய இன அழிப்புப் போரில் எமது பல்கலைக்கழக மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

தவிர, அவர்களின் பெற்றோர்களை, சகோதரர்களை, உறவுகளை சிங்களப் பேரினவாதம் கொன்றொழித்தது.

இந்தத் துயரத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நினைந்துருகும் பொருட்டு அமையப்பெற்றதே அங்குள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி ஒரு மறை பொருள் அல்ல. அந்தத் தூபி அமையப் பெற்றமை அனைவரும் அறிந்ததே.

அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை நாள்தோறும் மிக நுணுக்கமாக அவதானித்துக் கொண்டிருக்கும் புலனாய்வுத்துறைக்கு அது நன்கு தெரியும்.

அதிலும் குறித்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி மீள நிர்மாணிக்கப்பட்டமை உலகமறிந்த விடயம்.

நிலைமை இதுவாக இருக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தொடர்பில் புதிதாக விசாரணைகள் நடத்தக் கிளம்புவது திட்டமிட்ட ஒரு செயலேயன்றி வேறில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

ஆம், வன்னிப் போரில் உயிரிழந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் நினைவுகளை – முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் ஞாபகங்களைச் சுமந்து நிற்கின்ற முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி எங்கள் வழிபாட்டுத் தலம். அது எங்களின் நெருடலை அழுது தீர்க்கின்ற ஆற்றுகைத் தலம்.

இதை சிங்களத் தரப்புகள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இதைவிடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தொடர்பில் விளக்கம் விசாரணை நடத்துவதென யார் தீர்மானித்தாலும் அது மிகப்பெரும் முரண்பாட்டை ஏற்படுத்தும்.

குழப்பங்களை உண்டு பண்ணும். ஏன்? யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தையே முடக்கும். ஆகையால் தெளிந்து செயற்படுதல் யார்க்கும் நன்றாம்.

## மட்டக்களப்பில் பௌத்த மதம் ஒடுக்கப்படுகிறது

### ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாத்திரமின்றி நாடளாவிய ரீதியில் பிரிவினைகளை ஏற்படுத்தும் தரப்பினருக்கு எதிராக ஜனாதிபதி சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது தொடர்பான முழு அதிகாரமும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் பௌத்த மதம் ஒடுக்கப்படுவது தொடர்பில் கேள்வியெழுப்பிய ஓமல்பே சோபித தேரர், அரசியலமைப்புக்கமைய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மதச்சுதந்திரம் குறித்து ரணில் விக்கிரமசிங்க மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அங்கு பௌத்த மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் திபுல பெத்தான பகுதியில் வைக்கப்பட்ட புத்தரின் சிலை காணாமல் போயுள்ளதாகவும் மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன குற்றஞ் சாட்டியுள்ள நிலையிலேயே, அவர் இதனை நேற்று ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் புத்தரின் சிலையை வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த பகுதியில் வேறு ஒரு நாடு அமைக்கப்பட்டுள்ளதா?

நாடளாவிய ரீதியில் மக்கள் அனைவரும் சமாதானத்துடன் தங்கள் மதச்சார்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கிறார்கள். இதற்கு யாரும் எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. அவ்வாறிருக்க ஏன் கிழக்கில், முக்கியமாக மட்டக்களப்பில் மாத்திரம் இவ்வாறான அசாதாரணமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன? என அவர் கேள்வி எழுப்பினார். (நி)

## இஸ்ரேல் போரில் உயிரிழந்த பெண்ணின் சடலம் இலங்கைக்கு

(கொழும்பு)

இஸ்ரேல் ஹமாஸ் மோதலில் உயிரிழந்த இலங்கைப் பெண் அனுலா ரத்நாயக்கவின் சடலம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது காசாவை சேர்ந்த ஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தினர், இதனை தொடர்ந்து இஸ்ரேல் போர் பிரகடனம் அறிவித்து இருதரப்பிற்கும் இடையில் பாரிய யுத்தம் இடம்பெற்று வருகிறது.

இந்தநிலையில், குறித்த யுத்தத்தில் உயிரிழந்த இலங்கை பெண்ணின் சடலம் நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அதேவேளை, சடலத்தை பெற்றுக் கொள்வதற்காக உயிரிழந்த அனுலா ரத்நாயக்கவின் உறவினர்கள் விமான நிலையத்திற்கு வருகை தந்ததுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகள் குழுவும் இதில் கலந்து கொண்டுள்ளது. (நி)

## இனவாதத்தை தூண்டும் தேரரை கைது செய்ய வேண்டும்

### வேலுகுமார் வலியுறுத்து

(கொழும்பு)

சமூகத்தில் இனவாதத்தை விதைத்து – அதனை நாடெங்கும் பரப்பி மீண்டும் இன முறுகலை தோற்று விப்பதற்காக தொடர்ச்சியாக அடாவடித்தனத்தில் ஈடுபட்டுவரும் மட்டக்களப்பு, அம்பிட்டிய சுமணரத்ன தேரர் உடன் கைது செய்யப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் வலியுறுத்தியுள்ளார்.

அம்பிட்டிய சுமணரத்ன தேரரின் நடவடிக்கைகளை பார்க்கும் போது அவரின் பின்புலத்தில் பாரியதொரு வலையமைப்பு இருக்கக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இது விடயம் தொடர்பில் ஜனாதிபதியும் மகாநாயக்க தேரர்களும் உடன் தலையிட வேண்டும். மக்கள் மத்தியில் நற்சிந்தனைகளை விதைத்து, இந்த சமூகத்தை நல்வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு பௌத்த பிக்குகளுக்கு இருக்கின்றது. ஆனால் புத்தர் காட்டிய வழியை விடுத்து, தடம்மாறி பயணிக்கும் பிக்குகளும் உள்ளனர்.

அவர்களில் முதன்மையானவர் தான் அம்பிட்டிய சுமணரத்ன தேரர். "காவி" உடைக்குள் ஒளிந்துகொண்டு காட்டுமிராண்டித்தனமாக செயற்படுகின்றார். "வெட்டுவேன், கொத்துவேன்" என கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றார்.

ஒருபுறம் இனவாதம் கக்கிவிட்டு, மறுபுறத்தில் கதறி அழுது அனுதாபம் தேடுகின்றார்.

தமிழர்களுக்கு எதிராக சிங்கள மக்களை திசை திருப்ப முற்படுகின்றார். ஐ.சி. சி.பி.ஆர் சட்டத்தின்கீழ் அவர் கைது செய்யப்பட வேண்டும் என தெரிவித்தார். (நி)

## விளையாட்டுப் பொருட்கள் அங்காடியில் தீ விபத்து

(பாணந்துறை)

பாணந்துறையில் உள்ள கட்டடத்தில் தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

அதன்படி நேற்று சனிக்கிழமை காலை இரண்டு மாடிக் கட்டடத்தில் தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

குறித்த கட்டடம் விளையாட்டுப் பொருட்கள் விற்பனை நிலையமாக இயங்கி வந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பாரியளவில் விளையாட்டுப் பொருட்கள் எரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பாதிப்பு ஏற்படும் காலங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கே இனி இழப்பீடு

### அமைச்சர் மஹிந்த அமரவீர

(கொழும்பு)

பாதிப்பு ஏற்படும் காலப் பகுதிகளில், பயிர்ச்செய்கையை முன்னெடுத்த விவசாயிகளுக்கு மாத்திரமே எதிர்காலத்தில் இழப்பீடு வழங்கப்படும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கன்னொருவையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் வெளியிட்ட போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 1 ஹெக்டயருக்கு 100000 ரூபாய் வீதம் இழப்பீடு வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (நி)

## நுகர்வோர் அதிகாரசபைக்கான பொலிஸ் அதிகாரிகள் நியமனம்

நுகர்வோர் அதிகார சபைக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

விசேட புலனாய்வுப் பிரிவிற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் மேற்கொள்ளும் சோதனை நடவடிக்கைகளுக்கு பூரண பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்முனை தாக்குதலால் நிர்மூலமாகும் காசா

## அதிகரிக்கும் மரண ஓலம்



(இஸ்ரேல்)

**"கடந்த சில மணிநேரங்களில், காசா பகுதி மீது வான், கடல் மற்றும் தரையில் இருந்து தாக்குதல்கள் நடைபெறுவதாக இஸ்ரேலிய படைத்துறை செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி தெரிவித்தார்.**

ஹமாஸ் அமைப்பின் உட்கட்டமைப்பைத் தகர்க்க இஸ்ரேலிய தரைப்படைகள் காசாவிற்குள் தங்கள் தாக்குதல்களை விரிவுபடுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். கடந்த 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதல்களில் இருந்து இதுவரை 310 இஸ்ரேலிய வீரர்கள் இறந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக ககாரி கூறினார்.

இதேவேளை காசா மீது இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் அந்த நகரத்திற்கான இணைய வழி தொடர்புகள் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் அங்கு என்ன நடைபெறுகிறது என்பது வெளி உலகத்திற்கு தெரிய வாய்ப்பில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே பாலஸ்தீன செஞ்சிலுவைச் சங்கம், காசா பகுதியில் உள்ள அதன் நடவடிக்கை குழுவுடனான தொடர்பை முற்றிலும் இழந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளது. "எங்கள் குழுக்களின் அவசர மருத்துவ சேவைகளை தொடர்ந்து வழங்குவதில் நாங்கள் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளோம், குறிப்பாக இந்த இடையூறு மத்திய அவசரகால எண் "101" ஐ பாதிக்கிறது மற்றும் காயமடைந்தவர்களுக்கு அம்புலன்ஸ் வாகனங்கள் வருவதைத் தடுக்கிறது.

காசாபகுதியில் பணிபுரியும் தனது குழுக்களின் பாதுகாப்பு குறித்தும் கவலைப்படுவதாகவும், "அப்பாவி பொதுமக்கள், மருத்துவ வசதிகள் மற்றும் எங்கள் குழுக்களுக்கு உடனடி பாதுகாப்பு வழங்க இஸ்ரேலிய அதிகாரிகள் மீது அழுத்தம் கொடுக்க" உலகிற்கு அழைப்பு விடுப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (நி)

# இந்தியப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும்

## மாலைதீவு ஜனாதிபதி அறிவிப்பு



(மாலைத்தீவு)


மாலைத்தீவில் இருந்து இந்திய படைகள் வெளியேற வேண்டும் என்று மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கும்போது, இந்திய இராணுவம் மாலைத்தீவில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. வேறு எந்த நாட்டின் இராணுவம் இங்கே இருந்தாலும் எனது நிலைப்பாடு இதுவே தான்.

சுமார் 70 இந்திய இராணுவ வீரர்கள் மாலைத்தீவில் உள்ள ரேடார் நிலையங்களையும் கண்காணிப்பு விமானங்களையும் பராமரித்து வருகின்றனர்.

மேலும் இந்தியப் போர்க் கப்பல்கள் மாலைத்தீவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் ரோந்து செல்ல உதவுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# ஈரானின் ஆயுதக் கிடங்குகளை குறிவைத்து அமெரிக்கா தாக்குதல்



(டமகஸ்கார்)

சிரியாவில் ஈரானின் புரட்சிகரப் படையினரால் பயன்படுத்தப்படும் இரண்டு ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்து சேமிப்பு நிலையங்களை குறிவைத்து அமெரிக்கா வான் வழித்தாக்குதல்களை நடத்தியது.

ஈரான் ஆதரவு போராளிக் குழுக்களால் ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது சமீபத்திய தாக்குதல்களுக்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே நடந்து வரும் மோதலில் இருந்து தனியாகவும் வேறுபட்டதாகவும் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார். (நி)

# உலகை அச்சுறுத்தும் கடல்மட்ட அதிகரிப்பு

## எச்சரிக்கும் ஆய்வாளர்கள்

அந்தாட்டிக்கா பகுதியிலுள்ள பனிப்பாறைகள் உருகுவதால் கடல்மட்டம் அதிகரித்து வருகிறது. இந்த உருகும் அளவு தற்போது அதிகரித்துள்ளதாகவும் இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் இதன் வேகம் இன்னும் அதிகரிக்கும் என்றும் இதனால் உருவாகப் போகும் அழிவுகளை யாராலும் தடுக்க முடியாது என்றும் ஆராய்ச்சியாளர்கள் எதிர்வுகூறியுள்ளனர்.

ஐக்கிய இராச்சியத்தின் இன் தேசிய சூப்பர் கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி, ஆராய்ச்சியாளர்கள் நான்கு எதிர்கால கணிப்புகளை கண்டுபிடித்து வெளியிட்டுள்ளனர்.

உலக வெப்பநிலை உயர்வு தரவுகளின் படி மேற்கு அந்தாட்டிக் பனிக்கட்டியானது 20 ஆம் நூற்றாண்டில் இருந்ததை விட 21 ஆம் நூற்றாண்டில் இன்னும் மூன்று மடங்கு வேகமாக உருகும்.

இதில் நேர்மறையான விடயமாக, 21 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை பனிப்பாறைகள் உருகுவது மெதுவாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

மேலும், அது எதிர்காலத்தில் அதிகரித்த கதியில் பனிப்பாறைகளை உருக வைத்து பாரிய அழிவுக்கு வழிவகுக்கும்.இதனை குறைக்க வேண்டுமாக இருந்தால் பெற்றோலிய எரிபொருட்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்க வேண்டும்.

இயற்கைக்குபங்கம்விளைவிக்கும் செயற்பாடுகளை குறைத்து நீரால் உலகை மூழ்குவதை தாமதப்படுத்துவோம் என்று நோட்டன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 280 | 320 |
| உருளைக்கிழங்கு | 250 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 320 | 300 | 300 | 400 |
| தக்காளி | 200 | 200 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 100 | 160 | 150 |
| கோவா | 200 | 200 | 200 | 300 |
| கரட் | 350 | 300 | 320 | 400 |
| பூசணி | 80 | 70 | 80 | 80 |
| புடோல் | 200 | 200 | 160 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 270 | 350 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 450 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 400 | 400 | 320 | 400 |
| லீக்ஸ் | 200 | 160 | 180 | 300 |
| பீற்றூட் | 140 | 120 | 150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 350 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 250 | 400 |
| போஞ்சி | 500 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 280 | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1300 | 1400 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-90 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 500 | 500 | 500 |
| வெங்காயப்பூ | — | 300 | — | 450 |
| முள்ளங்கி | 100 | 120 | — | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | — | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டியில்...

போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று தென்னிலங்கையில் இருந்து சகோதர மொழி பேசும் ஒரு குழுவினர் குறித்த பகுதிக்கு வந்து, திஸ்ஸ விகாரைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடும் குழுவினருடன் இணைந்தனர்.

இவ்வாறு தென்னிலங்கையிலிருந்து தையிட்டி சட்டவிரோத விகாரைக்கெதிரான போராட்டக்களத்திற்கு வருகை தந்த பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த சில முற்போக்குவாதிகளுக்கு, சட்டவிரோத விகாரை தொடர்பான ஆக்கிரமிப்புக்களை சட்டத்தரணி காண்டீபன் விளங்கப்படுத்தினார். (ம-7,33,104)

## பாரிய போராட்...

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் நவம்பர் 13ஆம் திகதி பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் பாரிய போராட்டத்தை முன்னெடுக்க தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு முகங்கொடுத்து சம்பள அதிகரிப்பு மற்றும் 20,000 ரூபாய் கொடுப்பனவைக் கோரி இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

2016ஆம் ஆண்டு சம்பள அதிகரிப்புக்குப் பின்னர் ஏழு வருடங்களாக அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதற்கமைய, அனைத்து அரச நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல தொழிற்சங்கங்கள் இந்த போராட்டத்தில் கலந்துகொள்வதற்கு ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளன. (ம-7)

## பொங்கலிட்டு...

பௌர்ணமி தினமான நேற்று குறித்த விகாரைக்கு தென்னிலங்கையிலிருந்து சிங்கள மக்கள் வழிபாடுகளுக்காக அழைத்து வரப்பட்ட சமகாலப்பரப்பில் தையிட்டி விகாரைக்கு அண்மையிலுள்ள நாகதம்பிரான் கோயிலில் போராட்டக்காரர்களால் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது.

நாகதம்பிரான் ஆலயத்தில் ஒலி பரப்பப்படும் பக்திப் பாடல்களானது திஸ்ஸ விகாரையில் மேற்கொள்ளப்படும் பிரித் ஓதுதலுக்கு இடையூறாக காணப்படுவதாக கூறியே பொங்கல் வழிபாடுகளை மேற்கொண்டவர்களுடன் பொலிஸார் முரண்பட்டுள்ளனர்.

ஆனால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரித் ஓதும் சத்தம் தமக்கும் கேட்பதாகவும், அதனை நிறுத்தினால் தாமும் பாடல் சத்தத்தை குறைப்பதாக தெரிவித்தனர்.

இந்நிலையில், அங்கு நின்றிருந்த மூத்த சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், சட்டவிரோத விகாரையின் பிரித் ஓதும் ஒலியை நிறுத்தும்படி கூறி, பொலிஸாருக்கு விளக்கமளித்ததையடுத்து பிரித் ஓதும் ஒலி நிறுத்தப்பட்டு நிலைமை சீரானதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7,104)

## அரசின்...

கள் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“எமது நாட்டில் இவ்வாறான 30 ஆபத்தான மேம்பாலங்கள் காணப்படுகின்றன. அவற்றை மீள் நிர்மாணிப்பதாயின் 350 மில்லியன் ரூபாய் தேவைப்படுகின்றது.

அரச ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதிய கொடுப்பனவு, நிவாரணங்களை வழங்கும்போது முழு தொகையும் நிறைவடைந்து விடும். எஞ்சிய நிதி யாருடைய அரசாங்கமாக இருந்தாலும் வெளிநாட்டுக்கே செல்லும்.

கடந்த அரசாங்கங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக அதிக வெளிநாட்டு கடன்களை பெற்றுக் கொண்டுள்ளது.

தற்போது வெளிநாட்டு கடன்கள் கிடைப்பதில்லை. கடன் மறுசீரமைப்பு இடம் பெறும் வரையில் எதனையும் செய்ய முடியாது”. அரசு வரியையே அதிகரிக்க வேண்டும் என்றார். (ம-7)

## ரணில் - பஸில்...

பொதுஜன பெரமுன வழங்கியுள்ள பெயர் பட்டியலின் பிரகாரம் அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி வழங்கவில்லை என பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதியிடம் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளதுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அதிக அமைச்சுகளை கொடுத்துள்ளமைக்கான கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கருத்தைக் கேட்காமல் ஜனாதிபதி அமைச்சரவை மாற்றத்தை மேற்கொண்டுள்ளமைக்கு கடந்த சில நாட்களாக தொடர் ஊடக சந்திப்புகளை நடத்தும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியை எதிர்க்கும் வகையில் பல்வேறு கருத்துக்களையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த செயற்பாட்டுக்கு ஜனாதிபதி, பஸில் ராஜபக்ஷவிடம் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாகவும் பொதுஜன பெரமுனவின் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

இதேவேளை, பொதுஜன பெரமுனவுடன் கலந்துரையாடல்கள் எதனையும் நடத்தாது ஜனாதிபதி அமைச்சரவையில் மறுசீரமைப்பை மேற்கொண்டுள்ளமைக்கு அக்கட்சியின் பொது செயலாளர் சாகர காரியவசம் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (ம-7)

## இலங்கையில்...

ஜேர்மனிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இலங்கைக்கான ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறையின் பிரதம பிரதிநிதி மேரி அன்டோனியா வொன் ஷொன் பேர்னுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

இருதரப்பு வர்த்தகத்தை ஊக்குவிப்பதன் மூலம் அந்நிய நேரடி முதலீட்டு (FDI) நடவடிக்கைகளில் சிறப்பு கவனம் செலுத்தி, ஜேர்மனி வர்த்தக நிறுவனங்கள் இலங்கையில் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சாதகமான சூழலை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், இரு நாடுகளுக்கும் பரஸ்பர நன்மைகளைத் தரும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்வதோடு, பொருளாதார வளர்ச்சி மற்றும் செழுமையை வளப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் எதிர்க்கட்சித் தலைவரால் முன்வைக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதிநிதிகளின் கூட்டாண்மை விவகாரங்கள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு பிரதானி மலிந்த கஜநாயக்க மற்றும் தொடர்பாடல் முகாமையாளர் கேஷலா டயஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-7)

## போர்ட் சிற்றி...

2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் விதிகளின் கீழ் இந்த வர்த்தமானி ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு முதலீட்டாளர் வரியில்லா சில்லறை வணிகத்தை ஆரம்பிப்பதற்கு குறைந்தபட்சம் 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை முற்பணமாக வைப்பிட வேண்டும் என்பதுடன், வர்த்தக நடவடிக்கைகளில் சர்வதேச அளவிலான அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வணிகத்தை நடத்த குறைந்தபட்சம் 7 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடும் செய்ய வேண்டுமென வர்த்தமானியின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3523
சீட்டிழுப்பு திகதி 28.10.2023
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 08 39 48 75
L
64214
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.10.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1311
S 15 48 61 71 S
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
Double Chance
44777

லக்கி 7
திகதி 28.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0107
L7 இலக்கம் 2 7
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள்
இடபம் 9 5 6 8 0 9

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.28
சீட்டிழுப்பு இலக்கம் 590
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள்
மீனம் 08 19 40 43 மீனம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1629
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
V 09 07 14 48 59
Double Chance
54645

மஹஜன சம்பத
திகதி 2023/10/28
சீட்டிழுப்பு இலக்கம் 5281
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
G 1 7 0 6 7 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2255
வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.28
தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 44 53 74 76 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,130,476/-
DLB

சனிதா
திகதி 2023.10.28 வெற்றி வாரம் 4416 வர்ணம் இளம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 03 12 21 35 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,070,076.00
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 39843
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 3967
வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.28
தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 18 29 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,536,319.20
செகண்ட் சான்ஸ் விசேட இல. 958200 934
DLB

கப்ருக
திகதி 28.10.2023 வெற்றி வாரம் 1431 வர்ணம் சிவப்பு
K 28 08 10 47 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 157,853,504.20
செகண்ட் சான்ஸ் விசேட இல. 725042 999
DLB
தொலைபேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 641
திகதி 2023-10-28
வர்ணம் ஆரஞ்சு நிறம்
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 08 40 47
விதி எண் 02
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 12,845,160.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2081
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2023.10.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,019,976/-
வெற்றி இலக்கங்கள் 01 26 30 31 A
676839
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(17459)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

## கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை.
**கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்**

**076 573 4507** (17589)

## 25...

இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த குறித்த மீனவரகள். தலைமன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

(ம-7)

## கிளிநொச்சியில் இயங்கும் சிறுவர் இல்லத்திற்கு வேலையாட்கள் தேவை

**ஆண்,பெண் முகாமையாளர்**

**தகுதி**
- வயது எல்லை 30-55
- பட்டதாரி அல்லது க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி
- சிறுவர் பராமரிப்புத்துறையில் அனுபவம் பெற்றவர் அல்லது முகாமைத்துறையில் அனுபவம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**ஆண்,பெண் பராமரிப்பாளர்**

**தகுதி**
- வயது எல்லை 30-55
- க.பொ.த சாதரண தர பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.
- சிறுவர் பராமரிப்பில் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

(17602)

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்**

**071 535 4500**

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 263/= | |
| 400 g நெஸ்டமோல்ட் | - 800/= | (830/=) |
| 1 Kg தீட்டல் பச்சை | - 175/= | |
| 1 Kg கோதுமை மா | - 180/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 287/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 435/= | |
| 1 Kg றவை | - 289/= | |
| 400 g அங்கர் பால்மா | - 1040/= | (1080/=) |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | (430/=) |
| 70 g Baby Soap | - 108/= | (145/=) |
| 330 g டிகிரி மாரி பிஸ்கட் | - 262/= | (330/=) |
| 750 ml New VSP நல்லெண்ணை | - 1300/= | (1400/=) |
| 1 Kg மல்லி | - 372/= | |

1040/=




1080/-

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (17605)

Happy Supermarket
0777 8080 30

## SB TRAVELS

மிகச்சிறந்த குறைந்த விலையில் விமான ரிக்கெட் உங்கள் SB TRAVELS இல்.....

| | |
|---|---|
| கனடா - RT | LKR 394,000 |
| லண்டன் - RT | LKR 285,000 |
| பலாலி & சென்னை - RT | LKR 63,800 |
| கொழும்பு & சென்னை - RT | LKR 58,500 |
| டோகா - OW | LKR 59,600 |
| இத்தாலி - OW | LKR 119,000 |

அத்துடன் அமெரிக்காவில் குடியேறும் உங்கள் கனவை நிறைவேற்றும் அரிய வாய்ப்பிற்கான குலுக்கல் விசா விண்ணப்பம் செய்து தரப்படும்.
இச் சந்தர்ப்பம் 07th Nov 2023 வரை மட்டுமே.

Only 1000/- to Apply | Condition Apply

அது மட்டுமன்றி மலேசியா, இந்தியா, டுபாய், (B)பாங்கொக் போன்ற நாடுகளிற்கான விசாக்கள் பெற்றுத் தரப்படும்.

Hotline - 075 555 9932
Jaffna Office - 075 559 9708, 075 559 9709
Colombo 15 - 077 108 3482, 077 108 3483
Colombo 13 - 076 691 1089

No 198, Kasthuriyar Road, Jaffna
SB TRAVELS
Email : SBTravelsjaffna@gmail.com

(C-7517)

## மணமகள் தேவை

1982 ஆம் ஆண்டு பிறந்த ஆயிலிய நட்சத்திரமுடைய கனடா வதிவிட வாய் பேச முடியாத மணமகனுக்கு வாய் பேச முடியாத மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் தற்போது இலங்கையில் உள்ளார். (17434)

**077 990 6867**
**077 214 0220**

## ஆங்கிலக் கல்வி

நல்லூர் பின் வீதியில் Grade 3-Grade 11 வரை ஆங்கில வகுப்புக்கள் அனுபவம் மிக்க கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றன. (17603)

**077 711 5596**
**076 698 9807**

## ஆசிரியர்கள் தேவை

**தரம் 9,10,11**
**கணிதம்**
**ஆங்கிலம்**
நிர்வாகி - ஞான.திருக்கேதீஸ்வரன்
**076 176 8821** (17600)

K.T.C, ஆஸ்பத்திரி வீதி
கோண்டாவில்

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (17593)

**077 728 6061**

## VILLAGE HOTEL

பஸ் சேவை
**JAFFNA EXPRESS**
AIRPORT PICK UP DROP SERVICE

வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/=



(17484)

T.P: **077 544 8503**

## வாடகைக்கு

படிக்கும், வேலை செய்யும் பெண்களுக்கு Room வாடகைக்கு உண்டு (17590)

**076 051 0864**
**076 919 8259**

## மணமகள் தேவை

1987, பாவம் - 57,12 செவ், அச்சுவினி மற்றும் 1991 சூரியச் செவ்வாய் உடைய மணகனுக்கு மணமகள் தேவை. (17599)

**077 296 1462**

## தேவை

எமது உணவகத்திற்கு உதவியாள் (HELPER) தேவை
வயது (18-25) (17604)

**077 629 0894**

## குத்தகைக்கு தேவை

வான்கள் நீண்ட நாள் குத்தகைக்கு தனியார் கம்பனிக்குத் தேவை. தகுந்த பெறுமதி வழங்கப்படும். (17591)

**077 971 5376**


## அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு

*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?

*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி

*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் (C-7518)



சம்பளம் - 60,000/- (2 மாதம்)

V2 TRAVELS - 0777-068-777

## விமலம் திருமண சேவை

**கனடா, இலங்கை**
தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற உள்நாடு, வெளிநாடு வரன்கள் தாராளமாக உள்ளன. (17455)

கனடா
+16476571347 / +14372446737
இலங்கை
**077 240 9276**

## பணிப் பெண் தேவை

யாழ்.நகரில் சிறிய குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை. மாதாந்த சம்பளம் 64000 வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
**075 988 1000**
**075 498 5400**
**077 937 0000** (17587)

## முகாமையாளர் தேவை

எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றிற்கு முகாமையாளர் (Manager) தேவை. (17559)

தொடர்புகளுக்கு
**077 066 9467**




## PAPER CLASS

Ranjit Sir இன் Paper Class ஆரம்பமாகி விட்டது.

நடைபெறும் இடம்
Y.M.C.A தம்பசிட்டி (17585)

**077 600 4896**

## மணமகள் தேவை

1990 பிறந்த 4 ல் செவ்வாய் உடைய (அனுஷம்) கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை (17601)

**075 265 9878**
**076 092 2243**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org